
# ஆத்மஜோதி



சன்மார்க்க இறைவன் கோயில்
ஹவாய், வடஅமெரிக்கா

## ஆத்மஜோதி முத்தையா அவர்களின்
## 5வது நினைவாண்டு சிறப்புமலர்

# MEGA BANQUET HALL

## மேஹா பார்ட்டி ஹால்

உங்கள் இல்லங்களில் நிகழும் அனைத்து
வைபவங்களையும் சிறந்த முறையில்
நடாத்தி முடிக்க நகரில் அழகிய மண்டபம்

**50 பேர் முதல் 500 பேர் வரை**

திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
பிறந்த நாள்
மற்றும் எந்தவித
வைபவங்களுக்கும்
அறுசுவை உணவுகளுடன்
ஆடம்பரமாகக் கொண்டாட
எம்மிடம் தகுந்த **Package** உண்டு

**TEL: 416-457-8224**
**492-5589**

**3330 Pharmacy Ave., Scarborough, ON**
**(Pharmacy / MeNicoll)**

உ
சிவமயம்

# ஆத்மஜோதி

*தாபிதம்: 1948*

மலர் 1: இதழ் 2
விக்கிரம வருடம்
புரட்டாதி - மார்கழி
திருவள்ளுவர் ஆண்டு
2031

பிரதம ஆசிரியர்
திரு. வி. கந்தவனம்

ஆசிரியர் குழு
திரு. ச. திருநடராசா
திரு. சிவ. முத்துலிங்கம்

எழுத்தமைப்பு
திரு. மா. கனகசபாபதி

அச்சுப் பதிப்பு
விவேகா அச்சகம்

வெளியீடு
ஒன்ராறியோ
இந்து சமயப் பேரவை

தொடர்பு முகவரி
Siva Muthulingam
217 Morningside Ave.
Apt. 912
Toronto, ON.
M1E 3E4
Tel: (416) 724-6240

## பொருளடக்கம்

1. ஆசிரியர் தலையங்கம்
2. குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள்
3. நமது தெய்வ வழிபாட்டு முறைகளும் அவற்றின் பலாபலன்களும்
4. நவராத்திரி நாயகி
5. அரன் உறைவதற்கோர் கற்கோயில்
6. அழகமைந்த தேரினிலே அருளீய வருவாய்!
7. வாழ்வு தரும் திருமந்திரம்
8. புத்துயிர்பெற்ற இளந்தாரித் தெய்வம்
9. குருபூசை நாட்கள்
10. திருமுறைக் குறிக்கோள்
11. குழைந்தேன் வாசகத்தில்
12. திருமுறைக் கதைகள்
13. இலக்கண வித்தகர், பண்டிதர் இ. நமசிவாயம் அவர்கள்
14. இந்து சமயப் பேரவைச் செய்திகள்
15. ஆறுமுகநாவலர்
16. ‘ஆத்மஜோதி’ சுவாமிகளிடம் கேட்டவை

# நினைவு ஒழியாது

1994ஆம் ஆண்டு கனடாவில் நான்காவது சைவ சித்தாந்த மகாநாடு நடைபெற்றது. அனைத்துலக அளவில் இந்நாட்டில் முதன் முதலாக நடைபெற்ற இம் மாநாட்டுக்கு வருகை தந்திருந்த அறிஞர்களில் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களும் ஒருவர்.

அவர்கள் மாநாட்டு நிகழ்ச்சிகளிலும் பிற இடங்களிலும் ஆற்றிய உரைகள் இந்நாட்டில் எமது சமயத்தையும் மொழியையும் வளர்க்க வேண்டிய கடப்பாட்டைச் சுட்டிக் காட்டின. பேச்சளவில் நின்றுவிடாது செயலிலும் இறங்கினார். தாயகத்தில் தாம் ஆரம்பித்து நடத்துவது போன்ற இந்து சமயப் பேரவை ஒன்றினை இங்கும் அமைத்தார். தமிழ் மொழியைக் கற்பித்தல், சைவத்தை வளர்த்தல், தமிழ், சமய நூல்களை வெளியிடுதல், குரு பூசைகளை நடத்தல், கூட்டாக வழிபாடு செய்தல், தாயக அகதிகளுக்கு உதவுதல் என்று பல்வகைப் பணிகளைச் செய்யுமாறு கனடாவாழ் தமிழ் மக்களுக்கு அறிவுறுத்தினார். சமய, தமிழ் வகுப்புக்களை ஆரம்பித்து வைத்தார்.

மீண்டும் 1995 ஏப்பிரல் மாத ஆரம்பத்தில் 'ஆத்மஜோதி' அவர்கள் கனடாவுக்கு வருகை தந்து பலவிதமான சமயப் பணிகளில் ஈடுபட்டார். சொற்பொழிவுகளோடு வீட்டுப் பிரார்த்தனை, கூட்டுப் பிரார்த்தனை, அந்தர் யோக வகுப்புக்கள் முதலியவற்றை நடத்திக் காட்டினார். பல நூல்களை எழுதினார். குரு பூசைகளுக்குத் தலைமை தாங்கினார்

சமயப்பணி மொன்றியலிலும் தொடர்ந்தது. மொன்றியல் துர்க்கை அம்மன் கோயிற் கும்பாபிடேக வைபவத்துக்குச் சென்ற விடத்தில் 8-9-95ல் 'ஆத்மஜோதி' அவர்கள் இறைவனடி எய்திவிட்டார்கள்.

கனடாவிலேதான் அவரது கடைசிக்காலக் கடமைகள் நிறைவுக்கு வரவேண்டும் என்பது கடவுளின் கட்டளைபோலும். ஆன்மீக அலைகளை இந்த நாட்டில் எழுப்பி எமது கடமை உணர்வுகளை உணர்த்திய மகான் மறைந்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் அவரது நினைவுகள் மறையவில்லை. பேரினை நாம் நீக்கவில்லை; நினைப்பினை ஒழிக்கவில்லை.

முடிந்த அளவுக்கு 'ஆத்மஜோதி' முத்தையா அவர்களை முன்வைத்து அவர் பணிகளைத் தொடர்கின்றோம். அவரது நினைவாக இந்த இதழை அதிக பக்கங்களுடன் வெளியிடுகின்றோம்.

அன்பே சிவம்.

வி. கந்தவனம்

# குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் சமாதானப் பரிசு பெற்றார்

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் திரு. ஊத்தான் அவர்களின் ஞாபகார்த்தமாக வருடாந்தம் வழங்கப்படும் பரிசு இவ் வருடம் உலகெங்கும் இந்து சமயத்தின் ஆன்மீகக் கருத்துக்களை அழகுறப் பரப்பிவரும் ஹவாய் சைவ ஆதீன குருதேவர் சிவாய சுப்பிரமுனியசுவாமிகளுக்கு வழங்கப் பட்டது. நியூ யோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் செயலகத்தில் கடந்த ஆகஸ்ட் மாதம் 25ந் திகதி மேற்படி சமாதானப் பரிசு வழங்கும் வைபவம் நடைபெற்றது. இவ் விழாவில் கலந்து கொண்ட பல அரசியல் தலைவர்களும் சமயத் தலைவர்களும் கடந்த 50 வருடங்களாக குருதேவர் சிவாய சுப்பிர முனியசுவாமிகள் உலக சமாதானத்துக்கு ஆற்றிவரும் சேவை களைப் பாராட்டி உரையாற்றினார்கள். இந்த வைபவத்தினைத் தொடர்ந்து ஆகஸ்ட் மாதம் 28ந் திகதி முதல் 29ந் திகதி வரை ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற உலக சமாதான மகாநாட்டிலும் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் கலந்து கொண்டு உரையாற்றினார்.



கடந்த வருடங்களில் இந்த உலக சமாதானப் பரிசு முன்னாள் ரஷ்ய ஜனாதிபதி கோர்பசோவ், அன்னை திரேசா, முன்னாள் தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா, வண. தலைலாமா, வண. போப் ஜோன் போல், வண டெஸ்மன்ரோரோ ஆகியோருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இன்று உலகெங்கும் இந்து சமயத்தின் ஆன்மீகக் கருத்துக்களையும் இந்து கலாச்சாரத்தையும் பரப்பி வரும் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவயோகசுவாமிகளின் பிரதம சீடராவர். சமாதானப் பரிசு பெற்று பின் ஹவாயில் இருக்கும் தனது சைவ ஆதீனத்துக்குத் திரும்பும் வழியில் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளுக்கு நியூ ஜோசி, சிக்காக்கோ, ரென்னசி, கலிபோர்னியா ஆகிய இடங்களில் சிறப்பான வரவேற்பு விழாக்கள் அந்தந்த இடங்களில் வாழும் அடியவர்களால் அளிக்கப்பட்டன.

# நமது தெய்வ வழிபாட்டு முறைகளும் அவற்றின் பலாபலன்களும்

பிரதிஷ்டா கிரியாமணி
சிவஸ்ரீ விஸ்வநாத ரெங்கநாதக் குருக்கள்
கனடா கந்தசுவாமி கோயில்

உலகில் அநேக மதங்கள் இருக்கின்றன. அந்த அந்த மதத்தில் உள்ளவர்கள் தத்தம் மதப்பிரகாரம் வழிபாட்டு முறைகளைச் செய்துவருகின்றார்கள். இந்து மதம் தவிர மற்ற மதங்களில் முக்கியமாகப் பிரார்த்தனை மாத்திரமே வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. பார்ஸி மதத்தில் மாத்திரம் அக்கினிவழிபாடு ஹோமம் செய்வது முதலியன உண்டு. புத்த, சைன மதங்களிற் சில பிரிவுகளில் புத்தருடைய விக்கிரகத்திற்கும், சைனருடைய விக்கிரகத்திற்கும், பூசை ஆராதனை முதலியன நடைபெறுகின்றன.

கிறித்துவ மதத்திலும் இஸ்லாமிய மதத்திலும், கடவுள் தத்துவம் ஒப்புக்கொள்ளப்பட்ட போதிலும் உருவ வடிவத்திற் கடவுளை அவர்கள் ஒத்துக் கொள்வதில்லை. ஆனாலும் பிரார்த்தனை செய்வதற்கென்று ஒளிஇடமும் அந்த அந்த மதத்திறகுரிய சில அடையாளச் சின்னங்களும் அங்கு வைக்கப்பட்டிருக்கின்றன. யேசுவின் விம்பமும், கிறிஸ்து ஆலயத்தில் வைக்கப்பட்டு இருக்கின்றது. அவ்வண்ணமே நட்சத்திரமும் இளம்பிறைச் சந்திரனும் முகம்மதியர்களின் மசூதிகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. சீக்கிய மதம் ஆண்டவனை ஒத்துக் கொண்டாலும் உருவ வழிபாட்டினை ஒத்துக் கொள்வதில்லை. ஆனால் குருநானக் படமும் அவர்கள் மதப் புத்தகமும் கத்தி போன்ற புனிதமான பொருட்களும் குருத்துவாரத்தில் (பிரார்த்தனைக் கூடத்தில்) வைக்கப்பட்டிருக்கின்றன.

நமது மதத்திலோ பிரார்த்தனை பூசை, ஹோமம், யோகம், விசாரம், கீர்த்தனை, மாதா, பிதா, குரு முதலிய பெரியோர்களிடமும் பக்தி, நமது கடமையே கடவுள் என்ற நினைப்புப் போன்ற பல முறைகளிற் காரியங்கள் நடைபெறுகின்றன. பிரார்த்தனை என்பது சற்குணமூர்த்தியிடமோ நிற்குணமூர்த்தியிடமோ நமக்கு வேண்டியதைக் கேட்டுக் கொள்வது. நமது மதப்பிரகாரம் கடவுள் அநேக வடிவங்களில் அருள் பாலிக்கின்றார். எங்கும் நிறைந்து சகல வியாபகரூபமாய்ச் சகல காரணரூபமாய் நிற்குணரூபமாய் நிராகாரரூபமாய்ப் பிரகாசிக்கின்றார். அவர் சம்பந்தப்படாத வஸ்துவே

உலகில் இல்லை.

உதாரணமாக மின்சார சக்தியை எடுத்துக் கொள்வோம். அது கண்ணுக்குத் தெரிவது இல்லை. ஆனால் மின்சார சக்தியின் மூலம் பல தொழிற் சாலைகள், வானொலி நிலையங்கள், விளக்குகள் மின்விசிறிகள் போன்றவை இயங்குகின்றன. இவற்றிற்கு மின்சக்தி காரணமாக இருந்தாலும் அது தானாக ஒன்றையும் செய்யவில்லை. அதேபோல பரம்பொருள் சர்வ காரணமாக இருந்தாலும் தானாக ஒன்றும் செய்வதில்லை. சகுண, சாகார (அவதார) தேவதைகள் மூலந்தான் காரியங்கள் நடைபெறுகின்றன. சர்வகாரணப் பொருள் பரமாத்மாவின் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய தொழில்கள் பிரமா, விஷ்ணு, உருத்ரன் முதலிய சாகார ஈசுவரர்களாற் செய்யப்படுகின்றன.

உலகில் தர்மங்கள் குறைந்து அதர்மங்கள் வளரும்போது சாகார ஈசுவரனின் அவதாரமாக பூமியில் அவதரித்து தர்மத்தைக் காத்து அதர்மத்தை அழித்து வருவதுதான் அவதார பகவானின் காரியம். உலகிற்கு வேண்டிய மழை, காற்று, குளிர்ச்சி, வெப்பம் முதலியவற்றைச் செய்பவர்கள் வருணன், வாயு, சந்திரன், சூரியன், குபேரன் முதலிய தேவதைகள். இவர்களுக்குத் தலைவன் இந்திரன்.

நாம் செய்கின்ற நல்ல, கெட்ட காரியங்கள் முதலியவைகளைக் குறித்துக் கொண்டு அதற்குத் தகுந்த பலனை அளிப்பவர் இயமன் என்ற தேவதை. அவனுக்கு என்று ஓர் தனி நகரம் உண்டு, சிப்பந்திகளாக அநேக தூதுவர்கள் இருக்கின்றார்கள். இயமன் எழுதி வைத்துள்ள குறிப்பேட்டின் பிரகாரம் அவன் சிப்பந்திகளான யமதூதர்கள் உயிர்களை இவ்வுலகில் இருந்து இயமபட்டணம் இழுத்துச் சென்று அவர் அவர் பாவ புண்ணியத்திற்கு ஏற்றவாறு பலன்களை அழிப்பதற்கு ஏற்பாடு செய்கின்றார்கள்.

இதேபோல பித்ரு தேவதைகள் என்று சிலர் இருக்கின்றார்கள். அவர்களுக்கும் தனி உலகம் இருக்கின்றது. நாம் இங்கு இறந்த உடன் நம் கர்மத்துக்குகேற்றவாறு யமதூதர் மூலமாக யமலோகத்திற்கு சென்று துன்பம் அனுபவிப்பதற்கோ சுவர்க்கலோகத்திற்குச் சென்று புண்ணியத்தின் பலனை அனுபவிப்பதற்கோ அல்லது சுகதுக்கம் இரண்டையும் அநுபவிப்பதற்குப் பூவுலகிற் பிறவி எடுப்பதற்கோ செல்கின்றோம். அப்படிச் சென்ற பிறகு நம்முடைய வம்சத்தினர் மூலமாக நாம் எங்கிருந்தாலும் எப்பிறவி எடுத்தாலும் நம் கர்மாவுக்கேற்ற சுகதுக்கங்கள் எத்தனை இருந்தாலும் பித்ரு தேவதைகளின்

ஆசீர்வாதம் மூலமாக நமக்கு நமது பிறவியில் மன அமைதி ஏற்படுவதற்குக் கர்மாக்கள் செய்யப்படுகின்றன.

இறந்த பிறகு செய்யும் மாசிகம், வார்ஷிகம், பருவகாலங்கள் முதலிய காலங்களில் செய்யும் தர்ப்பணம் பிண்டம், ஹோமம் முதலிய கிரியைகளை நமது முன்னோர்களான பிதுர்களின் திருப்திக்காகச் செய்கிறோம். இப்படிச் செய்யும் காரியங்களின் பலன்களெல்லாம் பித்ரு தேவதைகள் மூலமாக நமது முன்னோர்களுக்கு ஆசீர்வாதமாகப் போய்ச் சேருகின்றன.

ஒவ்வொரு கிராமத்திலும் இரண்டு விதமான கோயில்களைக் காணலாம். ஒன்று சிவன், விஷ்ணு போன்ற ஈஸ்வரனின் கோயில். மற்றொன்று கிராமத்தின் காவல் தெய்வங்களாக விளங்கக்கூடிய சர்தா, மாரியம்மன், காளியம்மன் கோயில்கள். இத் தெய்வங்கள் எல்லாம் சகுன வடிவங்களான கணேசபகவான், சுப்பிரமணியசுவாமி, துர்க்கை முதலிய ரூபமாக வந்தபோது அவர்களுக்குச் சகாயமாக வந்த சக்தி தேவதைகளே. இந்தத் தேவதைகளின் முக்கியமான செயல் நாட்டின் கொடிய, கொள்ளை நோய்கள் வராமல் தடுப்பதே.

நமது மதப்பிரகாரம் பரமசத்வகுணத்தின் சொரூபம் பரமாத்மா. அவர் உலகில் காரியங்களை செய்வதற்காகச் சாகார, சகுண, அவதார மூர்த்திகளையும், சத்வ - ரஜஸ் தமஸ் என்ற மூன்று குணங்களையும் அவ்வப்போதுள்ள காரியத்திற்கேற்றவாறு எடுத்துக் கொள்கின்றார். தேவதைகள் சிவபுண்ணிய வசத்தினால் இந்திரன், சந்திரன் முதலிய அதிகார ஸ்தானங்களை அடைந்திருக்கின்றனர். நூறு அஸ்வமேத வேள்விகளைச் செய்தவன் இந்திர பதவியை அடைகின்றான். இதுபோன்று ஒவ்வொரு பதவியையும் அடைவதற்கு சில உபாசனைகளோ, வேள்விகளோ செய்து அதன் பலனாக அந்தந்த பேறுகளையும் பெறுகிறார்கள். புண்ணியம் முடிந்தவுடன் அவர்கள் அந்த ஸ்தானத்திலிருந்து, உலகைப் படைக்கும் பிரம்மா இருக்கும் பிரம்மலோகத்திற்குச் சென்று பிரம்ம தேவனோடு கூட இரண்டறக் கலந்து விடுவார்கள்.

தற்போது இந்த உலகில் (பூலோகத்தில்) ஜட்ஜ், என்ஜினியர், கலெக்டர், முதலிய பதவிகள் இருக்கின்றன. அந்தப் பதவிகளில் அமருவதற்கு யார் யாருக்கு விருப்பம் இருக்கின்றதோ அவர்கள் அப்பதவிக்கு ஏற்றவாறு உள்ள வித்தைகளையும் பயிற்சிகளையும் பெற்று அந்தப் பதவியை அடைகின்றார்கள். பின் அப்பதவியின் பெயராலேயே அவர்கள் அழைக்கப்படுகின்றார்கள். அவர்களுக்கு அந்தப் பதவிக்காலம் முடிந்த உடன் வேறு மனிதர்கள் அப்பதவிக்கு

வருவார்கள்.

இதுபோலவே பிரம்மா, இந்திரன், சந்திரன், போன்றவர்களும் அவர்களுடைய ஸ்தானங்களும் பதவிகளும். பிரம்மா உலகைப் படைக்கும் அதிகாரத்தைப் பெற்றார். இந்திரன், சந்திரன், வருணன், குபேரன் முதலிய தேவதைகள் பூலோகத்திற்கு வேண்டிய மழை, காற்று, வெய்யில் பொருளாதாரம் முதலியவைகளை அளிப்பதற்காக ஏற்பட்ட தேவதைகள். தேவதைகளுக்கு எல்லாம் தலைவன் இந்திரன். உதாரணமாக மின்சார போர்ட் கமிஷனர், விவசாய இலாக்கா கமிஷனர் போன்றோர் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் தலைவராக முதன்மந்திரி எவ்விதம் இருக்கின்றாரோ, அதேபோன்று எல்லா தேவதைகளுக்கும் முதன்மையாக தேவேந்திரன் இருக்கின்றான். உலக வாழ்க்கைக்குப் பொருளாதாரங்கள் தேவைப்படுவதால் தேவதைகள் வேள்விகள் மூலம் ஆராதிக்கப்பட்டு வந்திருக்கின்றனர்.

உலகைப் படைக்கும் பிரம்மதேவனும் புண்ணிய வசத்தினால் அந்த பிரம்ம பட்டத்தைப் பெற்றவரே. பிரம்மா-இந்திரன்-சந்திரன் முதலியவர்களுக்கு ஆதிகாரிய புருஷர்கள் என்று பெயர். புண்ணியம் இருக்கும் வரையில் தான் அவர்கள் அந்தந்தப் பதவிகளில் இருப்பார்கள். பிறகு அந்தப் பதவிகளுக்கு வேறு புண்ணியாத்மாக்கள் அந்த வேலைகளைக் கவனிக்க வந்து சேருவார்கள். ஆகவே நமது மதத்தில் இத்தனைவிதமான மூர்த்திகள் இருப்பதனால் வழிபாட்டு முறைகளும் கர்மகாண்ட முறைகளும் இருந்து வருகின்றன.

பிரார்த்தனையென்பது நிற்குண, சற்குண சாகார, அவதார சொருபத்தினிடம் முறையீட்டுக் கொள்வது.

உலகம் எவ்விதம் இயங்குகிறது, இதற்கெல்லாம் மூலசக்தி எங்கே இருக்கிறது, எந்த ஆதாரத்தின் கீழ் இவைகள் நடைபெறுகின்றன என்று விசாரத்தின் வாயிலாக அறிந்துகொண்டு பரமாத்மாவின் ஞானத்திற்கே விரோதமான அஞ்ஞானத்தைப் போக்கிக் கொண்டு ஞானத்தைப் பெறுவது விசாரம்.

கீர்த்தனை என்பது பகவானின் குணங்களைக் காணச் செய்வது. தாய், தந்தை, குரு முதலியவர்களிடம் ஈஸ்வர விசுவாசம் வைத்து அவர்களின் ஆசீர்வாதம் மூலமாக நமது வாழ்க்கையில் நல்லவற்றைப் பெறுவது.

நாம் செய்யும் கடமையே பலனையளிக்கும் என்ற நம்பிக்கையுடன் நல்ல காரியங்களைச் செய்து கொண்டே வந்து

அதன்மூலம் ஈஸ்வரன் அநுக்கிரகம் பெறுப்படுகின்றது.

பித்ருக்களின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காகத் தர்ப்பணம், பிண்டம், ஹோமம் முதலியன செய்யப்படுகின்றன.

மழை, காற்று, வெய்யில், குளிர்ச்சி மூலமாகப் பொருளாதாரம் முதலியவைகள் ஏற்படுவதற்காக இந்திரன் முதலிய தேவதைகளுக்கு யக்ஞங்கள், ஹோமங்கள் முதலியன செய்யப்படுகின்றன.

கிராமங்களில் வியாதி வெக்கைகள் இல்லாமல் சௌக்கியமாக இருப்பதற்காகக் கிராமதேவதைகளுக்கு அன்னப்படைப்பு, அபிஷேகம் முதலியனவற்றை நாம் செய்ய வேண்டும்.

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் கடவுள் வழிபாடு என்பது இன்றியமையாதது. ஆனால் அந்த வழிபாடு செய்வதற்கென்று இடவசதியிலோ மனத்திலோ சிரத்தைக்குறைவோ, அனாசாரமோ ஏற்பட்டால் அப்பொழுது கடவுள் வழிபாட்டிற்குக் குந்தகம் ஏற்படுகிறது. அதற்குப் பிரதியாக உலகிலுள்ள அனைவருக்கும் கடவுளின் ஆசீர்வாதம் கிடைப்பதற்காகக் கோவில்கள் கட்டி வைக்கப்பட்டு அங்கு பூசைகள் நடைபெற்று வருகின்றன. வசதி உள்ளவர்கள், சிரத்தை உள்ளவர்கள் அவரவர்கள் வீட்டிலேயே பூசைசெய்து கொள்ளலாம். ஆகவேதான் நமது மதத்தில் இத்தனைவிதமான பூசைகள் கர்ம அனுஷ்டானங்கள் முதலியவைகள் இடம்பெறுகின்றன.

---

## கந்தப் பெருமானுக்குச் சொந்தக் கோயில்

கனடாக் கந்தசுவாமியார் ஆனி உத்தரத்தில் (06-07-2000) ஸ்காபரோவில் உள்ள பேச்மவுண்ட் வீதியில் அமைக்கப்பெற்ற புதிய கோயிலில் எழுந்தருளியுள்ளார். தெய்வீகக் கிரியைகள் 02-07-2000 ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின.

விக்கிரகங்கள் 06-07-2000 வியாழக்கிழமை பிரதிட்டை செய்யப்பெற்றன மறுநாள் வெள்ளிக்கிழமை மகா கும்பாபிடேகம் நடைபெற்றது. அழகான கும்பாபிடேக மலர் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

# நவராத்திரி நாயகி

நயினையம்பதி நா. க. சிவராமலிங்கம்

சகலதும் சக்தி மயம். "எங்கெங்கு காணினும் சக்தியடா" என்று பாடினான் பாவலன் பாரதி. சகல ஜீவராசிகளும் சக்தியின் மூலமே இயங்குகின்றன. சர்வேசுவரன்கூட சக்தியின் மூலமே இயங்குகின்றான். "சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" என்பது திருவருட்பயன். சக்தி என்றால் ஆற்றல், வல்லமை எனப் பொருள்படும். ஆங்கிலத்தில் இதனை Energy என்பார்கள். சக்தியின் அளவிற்கு ஏற்பவே உயிர்களின் செயற்பாடுகள் அமையும். சக்தி மிக்க நாடு வல்லரசு எனப்படுகின்றது.

சக்தியை பூசிப்பதற்குரிய தினங்களே நவராத்திரி நாட்களாகும். நவராத்திரம் என்ற வடமொழியில் இருந்து வந்ததே நவராத்திரியாகும். நவராத்திரி என்றால் ஒன்பது இரவுகள் எனப் பொருள்படும். சிவனுக்கு ஒரு இராத்திரி. அவன் தேவிக்கு ஒன்பது இராத்திரி. தேவியை ஒன்பது மடங்காகப் பூசிக்க வேண்டுமென்பார்கள். இதனால் சக்தியின் பெருமை தெற்றென விளங்கும்.

கல்வி, செல்வம், வீரம், ஆகிய முச்செல்வங்களையும் குறைவின்றிப் பெறுதற்கு இறைவியை நறுமலர் தூவி இத்தினங்களில் இறைஞ்சுகின்றோம். உடல்வலிமை, உளவலிமை, ஆத்மீக வலிமை, ஆயுதவலிமை, பணவலிமை என்று வீரத்தைப் பலபடக் கூறலாம். ஆனால் வீரத்திற்கு இலக்கணம் வகுத்தவன் இராமபிரான். நிராயுதபாணியாய் நின்ற இராவணனைப் பார்த்து "இன்று போய் போர்க்கு நாளை வா" என்று கூறினான். இதுவேதான் உண்மையான வீரம். வீரம் விளங்க துர்க்கையைத் துதிக்கின்றோம்.

மலையிலே தான் பிறந்தாள் சங்கரனை மாலையிட்டாள்
உலையிலே ஊதி உலகக் கனல் வளர்ப்பாள்
நிலையிலே உயர்ந்திடுவாள் நேரே அவள் பாதம்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே.

பணம் இல்லாதவன் வாய்ச்சொல் செல்லாக் காசு. அவனை இல்லாளும் வேண்டாள். ஈன்றெடுத்த தாயும் விரும்பாள். வாழ்வின் வளப்பத்திற்கு பொருள் தேவை. அருளைப் பெறுதற்கும் அது அவசியம். எனவே வளமாக வாழுதற்கு அளவான பொருளைத்

தரும்படி திருமகளை உருக்கமுடன் வேண்டுவோம்.

பொன்னரசி நாரணனார் தேவி புகழரதி
மன்னு நவரத்தினம் போல் மேனி யழகுடையாள்
அன்னவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே.

கல்வியே செல்வம். கண்ணுடையர் என்போர் கற்றோர். வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிவகுப்பது கல்வி. இம்மையிலும் மறுமையிலும் ஏற்றம் தரும் கல்வியைச் செம்மையாகப் பெற்றால் செம்மாந்து வாழலாம். கல்வியும் கலைகளும் அருளும் கலைவாணியை கரம் கூப்பித் தொழுவோம்.

வாணி கலைத் தெய்வம் மணிவாக்குத் தருவாள்
ஆணிமுத்தைப் போல அறிவுமுத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய் காண்பதெல்லாம் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழுவமே.

கல்வியா செல்வமா, வீரமா தேவை என்று வாதிடாமல் மூன்றும் கலந்து செறிந்திருந்தால்தான் முழுமையான வாழ்வு வாழலாம். என்பதை உணரவேண்டும். முச் செல்வங்களையும் அருளும் மூவுலகிற்கும் முதல்வியை பக்தி செய்து வாழ்வில் சித்தி பெறுவோம். "சொல்லுக்கடங்காவே பராசக்தி சூரத் தனங்களெலாம் 'வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே" என்று வல்லாம்பிகையை வழுத்துவோம்.

மாதா பராசக்தி வையமெலாம் நீ நிறைந்தாய்
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே
எதாயினும் வழி சொல்வாய் எமதுயிரே
வேதாவின் தாயே மிகப்பணிந்து வாழ்த்துவமே!

ஓம் நமசிவாய

# அரன் உறைவதற்கோர் கற்கோயில்

## 'குவைப்பதி மலிந்த கோவே போற்றி'

- போற்றித் திரு அகவல் - மாணிக்கவாசக சுவாமிகள்

ஆதியில் இறைவனின் திருக்கோயில்களை மரத்தினாலும் மண்ணினாலும் செங்கல்லினாலும் அமைத்தனர் நம்முன்னோர். பல்லவ பேரரசனான பரமேஸ்வரவர்மனே (கி.பி. 672-700) திருக்கழுக்குன்றத்தில் இறைவனுக்கு முதன்முதலில் கல்லினால் கோயிலை அமைத்ததாக ஆராய்ச்சியாளர் கூறுவர். அதன்பின் பரமேஸ்வரவர்மனின் மகன் இராஜசிங்கவர்மனும் சிவனுக்கும் திருமாலுக்கும் கோயில்களை அமைத்துள்ளான். அதனைத் தொடர்ந்து, பல்லவ, சோழ, பாண்டிய, மன்னர்களும் அதன்பின் நாயக்க மன்னர்களும் பின்னர் நகரத்தார் என்னும் நாட்டுக்கோட்டைச் செட்டிமாரும் தாம் விரும்பிய தெய்வங்களுக்குக் கற்றிருப்பணி செய்துள்ளனர். சிவ பூமியாகிய இலங்கையின் தலைநகராகிய கொழும்பில் பொன்னம்பலவாணேசுவரர் கோயிலை சிவஞானியாகிய பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் முழுவதும் கல்லினால் அமைத்துள்ளார். மேலைநாடுகளில் முதன்முதலாக முழுவதும் கல்லினால் அமையும் இறைவன் திருக்கோயிலைக் கட்டும் பெருமை ஈழத்து மாமுனிவர் சிவயோகசுவாமிகளின் சீடர் ஸ்ரீசிவாய சுப்பிரமுனிய சுவாமிகளைச் சாரும்.

புல்லினால் ஐந்துகோடி புதுமண்ணால் பத்துக்கோடி
செல்லுமா ஞாலம்தன்னில் செங்கல்லால் நூறுகோடி
அல்லியங்கோதை கேளாய் அரனுறை ஆலயத்தைக்
கல்லினால் செய்வித்தோர்கள் கயிலைவிட்டு அகலாரன்றே!

திருப்பணியின் பெருமைபற்றி விளக்கமாகக் கூறப்படும் பாடலில் திருக்கோயில் திருப்பணியினைக் கல்லினாற் செய்வித்தவர்கள் கயிலைவிட்டு நீங்கார் என்பதைக் கொண்டு இதன் பெருமை உணரலாம். பல இலட்சம் இந்துக்கள் புலம்பெயர்ந்து வசதியாக வாழும் இடங்களில் இறைவனுக்கு முறையான ஆலயங்களை அமைக்க முடியாதிருக்கும்போது முன்னூறு இந்துக்களும் இல்லாத ஹவாய்த் தீவில் அரனுக்குக் கற்கோயிலை அமைக்கும் சற்குரு

ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் ஆற்றலைப் போற்ற வேண்டும்.

1949ம் ஆண்டு வைகாசிப் பூரணையன்று தம்மிடம் வந்த அமெரிக்க இளைஞனை ஈழத்து மாமுனிவர் சிவயோகசுவாமிகள் ஆட்கொண்டு அவ் இளைஞனின் முதுகில் ஓங்கி அறைந்து "இந்த அடியின் எதிரொலி அமெரிக்கா எங்கும் கேட்கும். சிங்கம்போல கர்ஜித்து உலகம் முழுவதும் சுற்றி வா! மாளிகைகள் கட்டி மனிதர்கள் பலருக்கு உணவளிப்பாய்!" என ஆசி வழங்கினார். தமது குருநாதரின் கட்டளைப்படி சற்குரு ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் அமெரிக்காவில் தாம் ஆலயங்களை அமைத்ததுடன் இந்துக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் அவர்கள் ஆலயங்களை அமைப்பதற்கு ஆலோசனையையும் ஆசிகளையும் வழங்கி மூலவிக்கிரகங்களையும் கொடுத்து உதவியுள்ளார்.

அமெரிக்காவின் முதலாவது சிவநடராசர் திருக்கோயிலை தாபித்தவரும் குவை ஆதீன கர்த்தருமாகிய சற்குரு ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளுக்கு 1975ம் ஆண்டு மாசி மாதம் சிவபெருமான் ஓர் அகக்காட்சி அருளினார். இந்த அகக்காட்சியின்படி அமெரிக்காவின் ஐம்பதாவது மாநிலமும், பசுபிக் சமுத்திரத்தில் கிழக்குக்கும் மேற்கிற்கும் மையமாக விளங்கும் ஹவாய்த் தீவுகளில் ஒன்றான குவை என்னும் தீவில் புனித வைலுவ நதிக்கரையில் ஓர் சுயம்பு லிங்கத்தைக் குருதேவர் கண்டார். இவ் ஆதி சுயம்பு லிங்கத்தை மையமாகக் கொண்டு அரனுக்குச் சன்மார்க்க இறைவன் கோயிலை முழுவதும் கல்லினால் அமைத்துவருகிறார் குருதேவர். வைலுவ நதிக்கரையிற் சுயம்பு லிங்கேஸ்வரரை மையமாகக் கொண்ட ஐம்பத்தொரு ஏக்கர் நிலப்பரப்பு இன்று சன்மார்க்க சரணாலயமாக விளங்குகின்றது. சன்மார்க்க சரணாலய நுழைவாயிலில் இமாலய உருத்திராட்ச மரங்களைக் கொண்ட ஓர் உருத்திராட்ச மரச்சோலை உள்ளது. இச்சோலையிலிருந்து கோயிலுக்கு இரு மருங்கிலும் கொன்றை மரங்களையுடைய ஒரு நீண்ட நேரியபாதை செல்கின்றது. இப்பாதையில் முதலில் ஓர் சர்வமதபீடம் உள்ளது. அதனையடுத்து வழியில் ஓர் ஆலமர நிழலில் விநாயகப்பெருமான் எழுந்தருளியுள்ளார். அவரிடம் விடைபெற்றுச் செல்லும்போது வழியில் ஒரு குன்றின்மேல் முருகப்பெருமான் தரிசனம் தருகின்றார். அவரையும் தரிசித்து நேரே சென்றால் சுயம்பு லிங்கேஸ்வரரை நாம் தரிசிக்கலாம். 1975ம் ஆண்டு முதல் சுயம்புலிங்கேஸ்வரருக்கு நித்திய பூசைகள்

நடைபெற்று வருகின்றன. சரணாலய நந்தவனத்தில் ஆறு தடாகங்கள் உள்ளன. இவற்றைச் சுற்றி ஒரு பாதை செல்லுகிறது. இது நாயன்மார்களின் நெறி என்று அழைக்கப்படும். இந்தப் பாதையின் இரு மருங்கிலும் எழு சிறு கோயில்கள் கட்டப்பட்டு அங்கே நாயன்மார்களின் விக்கிரகங்கள் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளன.

1975ம் ஆண்டு இறைவன் திருக்கோயில் திருப்பணி நிதி ஆரம்பிக்கப்பட்டதுடன் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரபல்யமான ஸ்தபதியாகிய திரு கணபதி அவர்களால் இறைவன் கோயிலுக்கான ஆகம விதிப்படியமைந்த வரைபடமும் மாதிரி உருவமும் உருவாக்கப்பட்டன.

ஆலயம் அமையும் புண்ணியபூமி சுத்திகரிக்கப்பட்டு உருத்திராட்ச மரங்களும், கொன்றை மரங்களும் நடப்பட்டன. மக்கள் காடுகளில் வாழும் காலத்திலேயே கடவுளை வழிபட்டு வந்தார்கள். கடவுள் வழிபாடு முதலில் மரத்தடியில்தான் தொடங்கப்பெற்றது. அம்மரமே கோயிலின் 'தலமரம்' எனப் போற்றப்படுகிறது. சிதம்பரத்தின் தல விருட்சம் தில்லைமரம். சிதம்பரத்தை தில்லைவனம் என்றும், மதுரையை கடம்பவனம் என்றும் கூறுவர். காஞ்சியின் தலமரம் மாமரமாகும். அம்மாமரத்தின் அடியிலிருந்துதான் கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணத்தைப் பாடினார் என்பர். குருதேவர் அவர்கள் இறைவன் கோயில் அமையும் பூமியில் சிவனுக்கு உகந்த உருத்ராட்ச, கொன்றை மரங்களை நட்டுள்ளார்கள்.

இறைவன் கோயிலின் கர்ப்பக்கிருஹத்தில் பிரதிட்டை செய்யப்பட இருக்கும் படிகலிங்கம் 1987ம் ஆண்டு ஆவணி மாதம் குருதேவர் அவர்களுக்கு கிடைக்கப்பெற்றது. ஆறு கோணங்களைக்கொண்ட படிக லிங்கம் எழுநூறு இறாத்தல் எடையும், முப்பத்தி ஒன்பது அங்குலம் உயரமும் உடைய அற்புதமானதும் உலகின் மிகப்பெரியதுமான படிக லிங்கமுமாகும்.

தற்போது இந்த படிக லிங்கம் குவை ஆதீனத்திலுள்ள சிவநடராசர் கோயிலில் இறைவன் கோயில் குடமுழுக்குக்காகக் காத்திருக்கின்றார்.

சிவனை வழிபடும் சைவமே மிகப்பழமையானது என்பது

மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடங்களில் காணக்கிடைத்த அகழ்வாய்வுப் பொருள்களாலும், வேதாகம புராண இதிகாசங்களினாலும் தெரிகிறது என்பர் ஆராய்ச்சியாளர். சக்தியைத் தனித்துப் பிரித்து வழிபாடு செய்தது பிற்காலநிலையாகும். சக்தியை இணைத்து வழிபட்டது முற்காலநிலை. திருமுறை ஆசிரியர்களும் சக்தியைச் சிவபெருமானோடு இணைத்தே துதித்து வழிபாடு செய்தமையை அவர்கள் அருளிச்செய்த பதிகங்கள் சான்று பகர்கின்றன. இலிங்கத்தைச் சிவமாகவும், பீடத்தைப் பிரிப்பின்றித் திகழும் சக்தியாகவும் கொண்டு வழிபட்டனர் நமது முன்னோர். உமைபங்கன், அம்பிகைபாகன், பெண்சுமந்த பாகத்தினன் என்று சிவனை திருப்பதிகங்களில் பாடுகிறார்கள் திருமுறை ஆசிரியர்கள். குருதேவர் அவர்கள் அமைக்கும் ஆலயத்திலும் சக்திக்குத் தனியாக சந்நிதி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. சிவனும் சக்தியும் பிரிப்பின்றி இலிங்கமாகவே வணங்கப்படும்.

இந்தியாவில் உள்ள பங்களூர் மாநிலத்தில் கைலாச ஆச்சிரமத்தின் தலைவரான திருச்சி சுவாமிகளின் மேற்பார்வையில் பதினொரு ஏக்கர் நிலப்பரப்பைக்கொண்ட கற்பிரதேசத்தில் ஒரு சிறு கிராமத்தை அமைத்து 1990ம் ஆண்டு மார்கழி மாதம் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் இறைவன் கோயிலுக்கான முதலாவது கல்லைச் செதுக்கி திருக்கற்பணியை ஆரம்பித்து வைத்தார்கள். திரு. கணபதி ஸ்தபதி அவர்களும் ஸ்ரீ திருச்சி சுவாமிகளும் மற்றும் பலரும் இவ்வைபவத்தில் கலந்து சிறப்பித்தார்கள். இறைவன் கோயில் பங்களூரில் கல்லினாற் செதுக்கப்பட்டு கப்பல்மூலம் ஹவாய்க்குக் கொண்டுவரப்பட்டுப் பொருத்தப்பட்டு பூரணமாக்கப்படும். இறைவன் கோயில் தமிழ்நாட்டிலுள்ள பழமைமிக்க கோயில்களின் சிற்பவேலைப்பாடுகளை உடையதாக அமையும். சிறப்பம்சமாக இசைபாடும் தூண்களும் பொருத்தப்படவுள்ளன.

1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 4ம் 5ம் திகதிகளில் தமிழ்நாட்டில் பிரபல்யமான சிவாச்சாரியாராகிய சிவஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாச்சாரி அவர்களும் அமெரிக்க பொஸ்டன் நகரிலுள்ள ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியாராகிய சிவஸ்ரீ வைரவசுந்தரக் குருக்களும் வேதசிவாகம முறைப்படி இறைவன் கோயில் அமையும் சிவபூமியில் பூர்வாங்க கிரியைகளை நடத்தி ஆலய அத்திவார வேலைகளைச் சாத்திர

முறைப்படி ஆரம்பித்து வைத்தார்கள். அதன்பின் ஆலயத்தின் நிர்மாண ஸ்தபதியாகிய திரு கணபதி அவர்கள் சம்பிரதாய முறைப்படி தமது பணியைத் தொடங்கினார்கள். குருதேவர் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் உலகின் பல பாகங்களிலிருந்து வருகை தந்திருந்து பக்தர்களும், ஹவாய் தீவிலுள்ள பிறமத தலைவர்களும், மாநகர முதல்வரும் மற்றும் பலரும் கலந்து சிறப்பித்து இறைவன் திருவருளைப் பெற்றனர்.

1999ம் ஆண்டு ஆவணி மாதம் இறைவன் கோயிலின் அத்திவாரம் போடப்பட்டுக் கோயிலின் அடித்தளம் அமைக்கப்பட்டது. இவ்வைபவத்திற்கு நூற்றிப்பத்து ஆண்டுகளை நிறைவெய்தி, அமெரிக்கா நியூயோர்க் நகரில் தமது ஆச்சிரமத்தை அமைத்து இறைபணியாற்றிவரும் ஸ்ரீ பூவா அடிகளார் வருகைதந்து சிறப்பித்து ஆசிகள் வழங்கியதுடன் தாமும் இறைவனின் திருவருளைப் பெற்றார். குருபூர்ணிமா தினத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் உலகின் பல நாடுகளிலுமிருந்து அடியவர்கள் கலந்து கொண்டனர்.

இந்துக்களின் சமயநெறியினை வகுத்துரைக்கும் நூல் வேதம் எனப்படும். அந்த வேதத்தில் வருணன், அக்கினி, வாயு, சூரியன் முதலான பல தெய்வங்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும் சிவபரம் பொருளே முதன்மையும் தலைமையும் உடையது என்பது விளக்கப்பட்டுள்ளது. இதனையே “வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது, நாதன்நாமம் நமச்சிவாயவே” என்று ஞானசம்பந்தரும் சிறப்பாக எடுத்துப் போற்றியுள்ளார். ‘கலிமெலிய அழலோம்பும்’, ‘கலிவலம்கெட ஆரழல் ஓம்பும்’ என்று யாகங்கள் வேள்விகள் செய்வதால் பாவங்களின்வழி உலகில்வரும் பஞ்சத்தினைப்போக்கி உலகில் வளம் சுரக்க அந்தணர்களும் ரிஷிகளும் வேள்விகளை நடத்தினார்கள். குவை ஆதீனத்திலும் குருதேவர் தமது சீடர்களுக்கு வேதங்களையும் ஆகமங்களையும் முறையே கற்பித்தும் பயிற்றுவித்தும் அவரது தலைமையில் யாகங்களை நடத்தி வருகிறார்கள்.

வேத சிவாகமங்கள் சிவபெருமானால் அருளிச் செய்யப்பெற்றவை. தமிழில் வேதாகமங்களாகவும் உபநிடதங்களாகவும் விளங்கும் பன்னிரு திருமுறைகளையும் சித்தாந்த சாத்திரங்களையும் சிவபிரான் உள்நின்றுணர்த்திய வண்ணம்

உலகம் உய்ய ஆசாரியப் பெருமக்கள் அருளிச்செய்தவை. அவர்கள் தமிழகத்திற் பரவியிருந்த புறச்சமயங்களை அகற்றிச் சைவசமயத்தை நிலைநிறுத்தினர். பக்தி இலக்கியங்களாகிய பன்னிரு திருமுறைகளையும் மக்களுக்குணர்த்தி வழிப்படுத்தினர். இறைவன் திருக்கோயிலில் திருமுறைகளை முறையே ஓதுவதற்காக கலிபோனியாவை பிறப்பிடமாகக் கொண்ட பரஞ்சோதி என்னும் அமெரிக்க இளைஞரை தமிழ்நாட்டிலுள்ள மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலின் ஓதுவார் மூர்த்தியாகிய நாகனாதன் ஓதுவாரிடம் அனுப்பி அங்கு ஐந்து ஆண்டுகள் தேவார திருவாசக, திருமுறைகளை கற்பித்துள்ளார்கள்.

ஏறத்தாழ இருபது கோடி அமெரிக்க டாலர்கள் செலவில் நிர்மாணிக்கப்படும் இறைவன் கோயில் திருப்பணி நிறைவுபெற இன்னும் சில ஆண்டுகளாகும் என்று குருதேவரின் சீடர்கள் கூறுகிறார்கள். இத்திருப்பணி தடையின்றி நிறைவுபெறப் பல அருளாளர்கள் தமிழ்நாட்டிலிருந்தபடியும், பல அருளாளர்கள் நேரில் குவை ஆதீனத்திற்கு வருகைதந்தும் ஆசீர்வதித்துள்ளனர். பங்களூர் கைலாச ஆச்சிரமத்தின் குருமஹா சந்நிதானம் திருச்சி சுவாமிகள், காஞ்சி காமகோடி ஸ்ரீ ஜெயந்திர சங்கராச்சாரிய சுவாமிகள் அவரது சீடர் விஜயேந்திர சுவாமிகள், மதுரை ஆதீன குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர், அமெரிக்கா வெர்ஜீனியாவில் வாழும் சச்சிதானந்த சுவாமிகள், ஆகியோரும் இன்னும் பல அருளாளர்களும் ஆசிகள் வழங்கினார்கள்.

- ச. திருநடராசா

## கவனிக்கவும்

துர்க்காதுரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுடன் தொடர்பு கொள்ள விரும்புவோர் பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

Dr. Thangammah Appakuddi
C/O Mr. S. Pushpanathan
B/6, Anderson Flats
215 Park Road
Colombo -05
Sri Lanka

# அழகமைந்த தேரினிலே அருளிய வருவாய்!

உலகிற்கோர் அன்னையென ஒளிர்கின்ற தேவி
உனையடைய வருமடியார்க் குற்றதுணை யாகி
நிலவுபுகழ் வளர்நயினா தீவிலமர் தாயே
நின்பெருமை யாரறிவார் நிமலனவன் வாமம்
குலவியமர்ந் தருளுதவிச் சமரசமும் காணக்
கொண்டவளே நாகம்மை எண்டிசையும் போற்ற
அலகிலருட் சீர்பெருகும் சித்திரங்கள் மிக்க
அழகமைந்த தேரினிலே அருளிய வருவாய்!

சிந்துபுடை சூழுமணி பல்லவமென் றின்னும்
சிறந்தமணித் திவிதுநா கேஸ்வரமே யென்னும்
வந்தநயி னார்தீவு வளர்நாக தீபம்
வளமுதவும் பெயர்நாக பூஷணியே பல்போர்
தந்தனைநீ தரிசிக்கத் தாயவளே யுன்னைத்
தஞ்சமென வந்தடைவார் தாமடைவர் பேறு
அந்தமுத சுரபிதரும் அம்பிகையே இந்த
அழகமைந்த தேரினிலே அரளிய வருவாய்!

தெங்குநிரை பிசுமத்தம் சேர்ந்தகுளிர் சோலை
சிந்துவழி படர்காற்றுச் சிந்தைமகிழ் வூட்ட
தங்குமிவண் அஞ்சலெனத் தானபயம் காட்டித்
தண்ணருளைத் தரும்நாக பூஷணியே தாயே
இங்குவரும் மக்களவர் எந்நாளும் வாழ்வர்
இறையவனும் சக்தியின்றேல் ஏதுசெய வல்லான்
அங்கணிசெய் மணியொலிக்க ஆனந்த மூட்டும்
அழகமைந்த தேரினிலே அருளிய வருவாய்!

- அருட்கவிமாமணி வே. செல்வநாயகம்

# வாழ்வு தரும் திருமந்திரம்

பேரறிஞர் முருகவே பரமநாதன்

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்” என்பது குறள். இந்த வாழ்வு முறை ஒரு ஒழுங்கில் அமைய வேண்டும். அதை அமைப்பவர் நாமே தாம். உலகநடையென்று ஒன்று பொதுவானது. அதிலும் சிறப்பு அம்சங்களும் உண்டு. பொதுவும் சிறப்பும் போற்ற வேண்டியன. எல்லா உயிர்க்குலமும் வாழ்கின்றனதாம். மனித வாழ்வு மகத்துவம் ஆனது. எனவே வாழ்வியல் தர்மம் பற்றி மனித நாகரிகம் வெகுதூரம் ஆராயப்பட்டுக் கொண்டே இருக்கிறது. சொல்வது இலகு. செய்வதுதான் கஷ்டம். கூர்ந்து பார்த்தால் தாவரம் கூட வாழ்கிறது. மலை வளர்கிறது. ஆறு ஓடுகிறது. எனவே அவற்றுக்கும் ஒரு வாழ்வு உண்டு. மனித வாழ்வு மகத்தானது. எல்லா உயிர் இனங்களுக்கும் உடல் அமைப்பு இருந்தாலும், மனித உடலமைப்பு வித்தியாசமானது. இந்த உடல், இதை இயக்கும் உயிர், பற்றிய சிந்தனைகள் மனித விவேகத்தின் செயற்பாடு. காலத்துக்குக்காலம் சிந்தனையாளர் வாழ்ந்து வழிகாட்டுகிறார்கள். இவ்வரிசையிற் பாரதநாடு முன்னணியில் நிற்கிறது. விஞ்ஞானச் சிந்தனை மிக முன்னேறும் சமகாலத்திலும் மெய்ஞ்ஞானந்தான் மனிதனை வாழவைக்கிறது. இவ்வரிசையிற் பலவாயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றிய திருமூலரின் சிந்தனைகள் திருமந்திரம் என அழைக்கப்படுகிறது. இந்நூல் சைவ சமயத்தினர்க்குச் சிறப்பான உயர்ந்த புத்தகம். இந்நூலை நாம் எல்லாம் நம் சந்ததியினர்க்கும் அறிமுகம் செய்து, அவர்களின் வாழ்வை நல்வழிப்படுத்துவதும் நம் தலையாய கடமையாம்.

‘வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்.’ இந்த உடம்பு அழியுந்தன்மையது. ஆனால் உயிருக்கு அழிவில்லை. அழிவற்ற உயிரையும் செயற்படுத்தும் ஒருபொருள் உண்டு. அதுவே பரம்பொருள். அப்பரம்பொருளோடு உள்ள நம் உறவைப் பயன்படுத்தி, நாம் உயிருக்கு உய்தி - விடுதலை தேடவேண்டும். நாட்டிலே விடுதலைப் போராட்டம் நடக்கிறது. அதுபோல உடம்பும் இந்த வீடான சிறைக்கூட்டுள் அமைந்து படும் இன்னல்களில் இருந்து விடுதலைபெற வேண்டும். “சிட்டுக்குருவியைப்போல விட்டு விடுதலையாகி நிற்பாய்” என்ற பாரதி வாக்கு ஆத்ம

விடுதலைக்கும் மனித (இன) விடுதலைக்கும் பொது எனலாம். இந்தச் சுதந்திர வேட்கை பற்றிப் பேசிய மூலமுனி உடம்பையும் உயிரையும் இணைத்துச் சிந்தித்த முடிபின் திருவாக்குகளே திருமந்திரம். அது நம்மை வாழவைக்கும் முதல்தரமான புத்தகம். அது மந்திரமாய்ப் பேணவேண்டியது. அவர் உடம்பு, உயிர் உறவுகளைப் பற்றிய உள்ளுணர்வை எழுப்பி, சீரிய, நேரிய வாழ்வுக்கு நம்மை வழிப்படுத்துகிறார். நாம் இந்த உயிர் உள்ளவரை (இடையறாது) ஓயாது உழைக்கிறோம். நமக்காக நாம் உழைத்தது எத்தனை நிமிஷங்கள். மனைவி, மக்கள், தாய் தந்தை, இனசனம், சமூகம் நாடு என்று பாடுபடும் ஒவ்வொருவரின் தியாகமும் முடிபுகாணமுன்னே முடிந்து போகிறது. இறந்து போகிறோம். இதைக் குலசேகர ஆழ்வார் அழகாக எடுத்துக் கூறுகிறார்.

தெரியேன் பாலகனாய்ப்
பல தீமைகள் செய்து மிட்டேன்
பெரியே னாயினபின்
பிறர்க்கே யுழைத் தேழையானேன்
கரிசேர் பூம்பொழில்சூழ்
கனமாமலை வேங்கடவா
அரியே வந்தடைந் தேன்
அடியேனையாட் கொண்டருளே.

- திருநாலாயிரம் 1034

நோற்றேன் பல்பிறவி
நுனைக்காண்பதோ ராசையினால்
ஏற்றேன் இப்பிறப்பே
இடருற்றன னெம்பெருமான்
கோற்றேன் பாய்ந்தொழுகும்
குளிர் சோலைசூழ் வேங்கடவா
ஆற்றேன் வந்தடைந்தேன்
அடியேனையாட் கொண்டருளே.

- மேலது 1035

நமக்குக் கிடைத்த இப்பிறவி போனால் எப்பிறவி வருமோ, என்ன நடக்குமோ எனத் தாயுமானார் நினைந்து நினைந்து ஏங்குகிறார்.

எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிது அரிதுகாண்
இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ
ஏது வருமோ அறிகிலேன்
கண்ணகல் நிலத்துநான் உள்ள பொழுதே அருள்
ககனவட்டத்தில் நின்று
கால்ஊன்றி நின்றுபொழி ஆனந்தமுகிலொடு
கலந்து, மதி அவசம் உறவே
பண்ணுவது நன்மை......

- தாயுமானவர் பாடல்: சித்தாகணம் 4

மதி அவசம் உறவே. என்னுடைய ஆன்மநிலை பரம்பொருளோடு ஒன்றுபடச் செய்யவே. நாம் நடமாடி வாழும் போதே நம் காரியங்களை செய்நேர்த்தியோடு முன்னெடுத்துச் செல்லும் செயல்திறம் எம்மிடத்தில் நிறைய உண்டு. இதேபோல நமக்கு இறைவன் அளித்த இம்மனித்தப் பிறவியையும் பயன்படுத்த வேண்டும். பெறுமதியை உணர்ந்து நடக்கவும் வேண்டும்.

வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசுபதமருள் செய்தவன் பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரந் தீவளைத் தான்தில்லை யம்பலத்துக்
கூத்தனுக் காட்பட்டிருப்பதன் றோநந்தங் கூழைமையே.

- திருமுறை 4:81.5

நீரிற் குமிழி போன்ற வாழ்வின் நிலையான சம்பாத்தியம் அருட்செல்வம். எனவே அவனருளைப் புறமே கிடந்து புலம்பிப் பெறஇயலாது. நம் உடம்போடும், உயிரோடும் கலந்து, எள்ளில் எண்ணெய் போல் மறைந்துள்ள மாமணிச் சோதியைக் கண்டு பிறவியில் இருந்தும் தப்ப (கடைத்தேற) வேண்டும் என்கின்றார் எம்பிரான் மூலர். இந்த உடம்பு ஒரு இயந்திரம். இதை இயக்குபவன் இறைவன். அவன் இயந்திரி. இந்த இயந்திரவியல் நுட்பம் சொன்னதே திருமந்திரம்.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவும் மாட்டார்

உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்த
உடம்பை வளாத்தேன் உயிர்வளர்த்தேனே
- திருமந்திரம் 704

உடம்பும் உயிரும் சேர்ந்தாற்றான் மனித வாழ்வு நடைபெறும். இவ்வுடம்பை வெறும் ஊன்உடம்பாக, ஊண்உடம்பாகப் போஷிக்காமல், உடம்பின் உதவியால், உயிர் சிறப்படையும் வகையில் நம்மைப் பேண வேண்டும். காரணம் நம் உடம்பின் உள்ளேதான் இறைவன் உறைகின்றான். ஊனை வளர்த்துப் புனிதமாகப் பேணினாற்றான் எம்பெருமானைக் காணலாம். இவ்வுடம்பு நமக்குக் கிடைத்தது இறைவனை வழிபட்டு இனிமேல் பிறவாமல் இருக்கும் ஒரு மேலான நிலையைப் பெறவே. உணவின் உறைவிடமல்ல உடம்பு. இவ்வுடம்பு உயிர்வாழவே நாம் பெற்றாலும் உடம்பை வளர்க்கும் உபாயம் இறைவனை இடைவிடாது தியானிப்பதே. மாணிக்கவாசகரும் 'இடைவிடாதுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்' எனப் பாடியதும் எமக்காகவே. எனவே உடல் மறைந்தால் உத்தமனை அடைய முடியாது. ஆதலின் இந்த உடம்பு அழுக்கானது, அழியந்தன்மையது, உயிர் போனால் நாறும் குணம்உடையது, மற்றவராற் பிணம், சவம் என இழிவாகப் பேசப்படுவதானாலும் போற்றப்பட வேண்டியது. காரணம் உத்தமனாம் இறைவன் குடியிருக்கும் கோவில் நம் உடம்பு என ஆசிரியராய் இருந்து நமக்குப் பாடம் சொல்லித் தருகிறார் மூலமுனி.

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.
- திருமந்திரம் 705

பாற் கலத்தைப் பாலுக்காகப் பேணிக்காப்பது போன்று, உடம்பின் உள்ளே சிவபெருமான், உயிர்க்குயிராய் கோவில் கொண்டுள்ளான் என்னும் உண்மையை உணார்ந்து அதனை அவனது சொத்து (உடைமை) எனப் பேணுகின்றேன். இவ்வுண்மையை உணராத காலத்து இவ்வுடம்பை இழுக்குடையது என எண்ணனேன் என்பது இம்மந்திரப்பொருள் ஆகும்.

நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன். - சுந்தரர்

# புத்துயிர் பெற்ற இளந்தாரித் தெய்வம்

ஈழத்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் அமைந்துள்ளது இணுவில். இப்பதியில் வித்தியாசமான ஒரு புராதனக் கோயில் இருக்கின்றது. வித்தியாசம் - ஏனென்றால் சமயங்கள்போற்றும் எத் தெய்வமும் இங்கு பிரதிட்டை செய்யப்படவில்லை. மாறாக, ஒரு சிற்றரசனுக்குக் கட்டப்பட்ட கோயிலாக இது காணப்படுகின்றது.

யாழ்ப்பாண அரசர் காலத்தில் இணுவிற் பகுதிக்குத் தலைவராக கைலாயநாதன் என்பவர் இருந்தார். இவர் சோழநாட்டின் வடபகுதியிலிருந்து வந்த காலிங்கராயர் என்பவரின் மகன். கைலாயநாதன் சிறந்த வீரமும் துடிப்பும் அழகும் குணமும் உள்ள இளைஞனாக விளங்கிய காரணத்தால் இளந்தாரி என அழைக்கப்பட்டார்.

இளந்தாரியைப் பாட்டுடைத் தலைவராக வைத்து சின்னத்தம்பிப் புலவர் 'பஞ்சவன்னத் தூது' என்னும் நூல் ஒன்றைச் செய்திருக்கின்றார். 18ம் நூற்றாண்டில் வாழ்ந்த சின்னத்தம்பிப் புலவரை ஈழத்துத் தமிழர் நன்கு அறிவர். எனினும் அவர் இணுவிலிற் பிறந்தவர் என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். சிவகாமியம்மை பதிகம், சிவகாமியம்மை பிள்ளைத் தமிழ் என்பவற்றோடு சில நாடக நூல்களையும் ஆக்கிய பெரும் புலவர்.

ஈழத்துத் தூது இலக்கியங்களில் தனியிடம் வகிக்கும் இந்நூல் 'கைலாயநாதன் பங்சவன்னத் தூது' என்றும் 'இளந்தாரி பஞ்சவன்னத் தூது' என்றும் வழங்கப்படுகின்றது. பஞ்சவன்னத் தூது என்னும் பெயர் நிலா, தென்றல், கிளி, அன்னம், தோழி என்னும் ஐந்துவகைத் தூதுகளை அனுப்பியமை குறித்து வந்தது.

சின்னத்தம்பிப் புலவர் தமது ஊருக்குச் சிறப்பளித்த இளந்தாரியை இலக்கியத்தில் ஏற்றியது ஒன்றும் வியப்பில்லை. ஆனால் பொதுமக்கள் அவரைச் சமயத்தில் ஏற்றியதுதான் வியப்பு. அந்த அளவுக்கு இளந்தாரியின் ஏற்றமும் தோற்றமும் தலைமைத்துவமும் அவர்களைக் கவர்ந்துவிட்டது. "வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்றார் வள்ளுவர் பெருமானும்.

தலைவர்களையும் போர்வீரர்களையும் வழிபடுதல் தமிழ்நாட்டுப் பழைய வழக்கங்களில் ஒன்று. இது 'நடுகல்' வழிபாடு எனப்படும். ஒரு தலைவனோ போர் வீரனோ இறந்தபின் அவர்கள் பெயரையும் சாதனைகளையும் நெடுங்கற்களில் பொறித்து, அதில் அவரது

உருவத்தையும் செதுக்கி மாலை, பீலி முதலியன புனைந்து பழந்தமிழர் வழிபட்டனர்.

அந்த வழக்கத்தையொட்டி இளந்தாரிக்கு அமைக்கப்பட்ட நடுகல் காலப்போக்கில் கோயிலாக மாற்றம்பெற்றது. முற்காலத்தில் மாதந்தோறும் மாலை நேரத்தில் விளக்கு ஏற்றுவதும் பங்குனி மாதத்தில் ஆண்டுப் பெருவிழா நடத்துவதும் இளந்தாரி கோயிலின் பிரதான வழிபாட்டு முறைகளாக இருந்தன. இக்காலத்தில் ஏனைய கோயில்களைப்போன்று விசேட திருவிழாக்களும் நடத்தப்படுகின்றன.

ஆண்டுப்பெருவிழாவில் பஞ்சவன்னத் தூது படிக்கப்படும். படிப்பு ஓலைச் சுவடிகளைக் கொண்டும் பின்னர் கடதாசிப் பிரதிகளைக் கொண்டும் நெடுங்காலமாக நடைபெற்றுவந்தது. கடந்த ஆண்டு பிற்பகுதியில் பஞ்சவன்னத் தூது ஓர் அழகிய நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

நூலைப் பதிப்பித்து வெளியிட்டிருப்பவர் தமிழ்வேள் திரு. க.இ.க. கந்தசுவாமி அவர்கள். இவரும் இளந்தாரி கோயில் உள்ள இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இணுவில் சைவமகாசன வித்தியாசாலையிலும் கொழும்பு றோயல் கல்லூரியிலும் ஆசிரியராக இருந்தவர். ஆன்ற தமிழ் அறிஞர். கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக் குழுவிற் பலகாலம் பணிபுரிந்து தமிழ் வளர்த்த பெருமையுடையவர்.

சின்னத்தம்பிப் புலவர் வரலாறு, தூது இலக்கியப் பண்பும் பயனும், தூது நூல் அமைப்பும் வகையும், பஞ்சவன்னத் தூது நூல் அமைப்பு, இந்நூல் காட்டும் நாடும் நகரும், பாட்டுடைத் தலைவன், கடவுள் வழிபாடு, இளந்தாரி வழிபாடு, நூற்சிறப்புக்களும் பயனும் முதலாய ஆய்வுக் கட்டுரைகளோடு பஞ்சவன்னத் தூது நூலை வெளியிட்டிருக்கின்றார் தமிழ்வேள். நூலுக்குப் பலவகையான உரைவிளக்கங்கள் தந்திருப்பது அதனை நன்கு விளங்கிக் கொள்ள மிகவும் உதவியாகின்றது.

ஈழத்துப் பழந்தமிழ் நூல் ஒன்றுக்குப் புதிய வடிவம் தந்திருக்கும் அதேவேளையில், பழந்தமிழர் நடுகல் வழிபாட்டுடன் தொடர்புடைய இளந்தாரி வழிபாட்டுக்கும் புத்துயிர் அளித்திருக்கும் தமிழ்வேள் க.இ.க. கந்தசுவாமி அவர்களின் பணி நிகரற்றது; பாராட்டுக்குரியது.

# குருபூசை நாட்கள்

புரட்டாதி
26.09.2000 அருணந்திசிவாசாரியார் குருபூசை
ஐப்பசி
27.10.2000 மெய்கண்டதேவர் குருபூசை
கார்த்திகை
18.11.2000 ஆறுமுகநாவலர் குருபூசை

## மாதச் சிறப்புகள்

### புரட்டாதிச் சனி

இந்துக்களுக்குப் புரட்டாதி மாதத்துச் சனிக்கிழமைகள் விரதநாட்களாகும். சனீஸ்வரப் பெருமானது அனுக்கிரகத்தைப் பெறவிரும்புவோர் ஒவ்வொரு புரட்டாதிச் சனிக்கிழமையிலும் சனிபகவான் குறித்து விரதம் இருப்பர். புரட்டாதிக் கடைசிச் சனிக்கிழமை சனிபகவானுக்கு எள் எண்ணெய் விளக்கு எரித்து விரதத்தைப் பூர்த்தி செய்வர்.

### ஐப்பசி வெள்ளி

வெள்ளிக்கிழமை பலவழிகளும் ஒரு புனிதநாள். சிறப்பாக இது முருகப்பெருமானுக்குரிய தினம். ஐப்பசி மாதப் பௌர்ணமி அச்சுவினி நட்சத்திரத்தோடு கூடிவருவதால் ஐப்பசி ஒரு சிறப்பான மாதமாகக் கொள்ளப்படுகிறது. இந்தச் சிறப்பான மாதத்துக்குரிய வெள்ளிக்கிழமைகளில் முருகனை நினைந்து விரதம் அனுட்டித்தல் மிகுந்த பலன்களை அளிக்கும்.

### கார்த்திகை நோன்பு

கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரம் திருக்கார்த்திகை எனப்படும். இது முருகப்பெருமானுக்குரிய நாளாகும். முருகப் பெருமானைக் கார்த்திகைப் பெண்கள் வளர்த்தார்கள். அதனால் அவருக்குக் கார்த்திகேயன் எனும் பெயரும் வரலாயிற்று. இத்தினத்தில் முருகப்பெருமானை வழிபட்டு விரதம் இருத்தல் சிறந்த பலனை அளிக்கும். நாரதமுனிவர் கார்த்திகை நாள் விரதத்தை 12 ஆண்டுகள் கடைப்பிடித்துப் பெருஞ் சித்திகள் எய்தினார் என்பது புராண வரலாறு.

### மார்கழி நோன்பு

மார்கழி நோன்புக்கு மற்றொரு பெயர் பாவை நோன்பு. மார்கழி மாதத்திற் பெண்கள் தமது குலதெய்வங்களை நினைந்து விரதமிருத்தல் தமிழர் மத்தியில் மிகப் பழங்காலந்தொட்டு நிலவிவரும் வழிபாட்டு முறையாகும். மணிவாசகர் திருவெம்பாவை பாடியருளியமைக்கு இவ்வழிபாடு பின்னணியாக அமைந்துள்ளது. சைவர்கள் மட்டுமன்றி வைணவரும் இந்நோன்பை அனுட்டித்தமை ஆண்டாள் பாடியருளிய திருப்பாவையால் அறியலாம்.

சைவர்கள் மார்கழித் திங்களில் திருவாதிரைக்குப் பத்து நாட்களுக்குமுன் தொடங்கி திருவாதிரை நாள்வரை இந்த நோன்பைப் பிடிப்பர். முக்கியமாகக் கன்னிப் பெண்கள் தமக்கு நல்ல கணவரை நல்குமாறு சிவபெருமானை வேண்டுவதாகத் திருவெம்பாவை கூறுகிறது. சிவபெருமானுக்குத் திருவாதிரை நட்சத்திரத்தோடுகூடிய நிறைமதி மிகவும் உகந்தது. அதனாலேயே சிவபெருமான் ஆதிரையின் முதல்வன் என்றும் ஆதிரையான் என்றும் அழைக்கப்படுவர். திருவாதிரை நாளன்று தில்லையில் நடக்கும் நடராசர் பூசையைக் காண்பதைப் பெரும் பேறாகச் சைவர்கள் கருதுவர். இது ஆருத்திரா தரிசனம் எனப்படும். ஆருத்திரா என்பது ஆதிரை.

## ஆழ்கடலானின் அனுபவப் பிழிவு

பேரறிஞர் திரு. முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்) அவர்களால் எழுதப்பெற்ற 'நினைக்க நினைக்க என்னும் அனுபவ நூலின் வெளியீட்டு விழா திரு. சாமி அப்பாத்துரை அவர்களின் தலைமையில் நோத் யோக்கில் உள்ள ஸ்ரீசிவா விஷ்ணு ஆலயத்தில் 01-02-2000 சனிக்கிழமை நடைபெற்றது.

ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவத்திரு ச. லலிததாசக் குருக்கள் ஆசியுரையும் கவிஞர் வி. கந்தவனம், சைவப்புலவர் க. சிற்றம்பலம் ஆகியோர் வாழ்த்துரைகளும் வழங்கினர். நூலின் வெளியீட்டுரையை கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்களும் ஆய்வுரையை திரு. செ. சத்தியமூர்த்தி அவர்களும் நிகழ்த்தினர். முதற்பிரதியை திருமதி விமலா பாலசுந்தரம் பெற்றுக்கொண்டார். நூலாசிரியர் பதிலுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது.

# திருமுறைக் குறிக்கோள்
## (பாகம் 1)

கு.வி. மகாலிங்கம்
வித்துவான், சைவசித்தாந்த பண்டிதர், சைவப்புலவர்

திருமுறைகள் சிவசொருபமானவை, மந்திர வடிவானவை. வாழ்க்கைக்கு நெறியைக் காட்டும் ஞானக்கண்ணாய் உள்ளவை. திருக்கோயில் மூர்த்திகள் போல ஆற்றலுள்ளவை!

திருமுறைகள் சதாவழிபட வேண்டியவை. வழிபாடு செய்வோருக்குப் பயன்தருபவை. அவர்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழச்செய்து முத்தியின்பம் தருபவை. இவ்வுலகில் வாழ்வில் முன்னேற்றம் அடைந்து வெற்றிபெறுவதற்கு ஊன்றுகோல்போல் உறுதுணையானவை. திருநெறிய தமிழ்வல்லார் தொல்வினைதீர்தல் எளிதாமே என்றும், நல்லவாயின நன்மை அடையுமே என்றும் பாலறாவாயப் பெரியோர் கூறியருளியுள்ளார்.

'இன்று நாம் செய்ய வேண்டியது
திருமுறைக் குறிக்கோள் ஞானதானம்'

**சுவாமி விவேகானந்தர்:** "மனிதனுக்கு சிறப்பாக எம் தமிழ் இனத்துக்கு இன்று ஞானதானம் அளிப்பவன்தான் மனிதகுலத்துக்குப் பேருதவி செய்தவனாவான். ஆன்மீகம் அனைத்திற்கும் உண்மையான அத்திவாரமாகும். ஆகவேதான் ஆன்மீக தேவைகளில் உதவி செய்தவர்கள் மிகுந்த சக்தியும் செல்வாக்கும் பெற்று விளங்குகிறார்கள்....."

மனிதனுக்கு ஆன்மபலம் தருவது,கற்பிப்பது, முழுமுதற் கொள்கையினை நிலைநாட்டுவது, மனிதப் பிறவியை மதிப்பது, ஞானதானம். திருமுறை வழி எம் இனத்துக்கு இதனை அளிப்பது இன்று மிக முக்கியம்.

### திருமுறைக் குறிக்கோள்

திருமுறைப் பெருமிதப் பொலிவைப் பாராயணம் செய்வது, பேசுவது, நல்ல வண்ணம் வாழவழிகாட்டுவது, என்றும் இன்பம் தழைக்க நெறி உரைப்பது, மக்கள் தொண்டே மகேசன் தொண்டென மொழிவது அறங்களை வலியுறுத்துவது முதலியன திருமுறைக் குறிக்கோள்களாகும்.

திருஞானசம்பந்தர் சுவாமிகளின் தேவாரச் சிறப்பை பின்வரும் பாடல் கூறுகிறது

புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்தனார் தலைதத்தெனத் தத்துமே
கனவில் ஏடிடப் பச்சென்றிருக்குமே
கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனை ஆக்குமே
பழைய என்பு பொற்பாவைய தாக்குமே
சினவ ராவிடம் தீரெனத் தீருமே
செய்ய சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே!

## முழுமுதற் கொள்கை

திருமுறைகளை அருளிச் செய்த ஞான ஆசிரியர்கள் பல காலத்தவர் பல நிலையினர். குலத்தாலும் நிலத்தாலும் ஒன்றுபட்டவரும் வேறுபட்டவரும் உள்ளனர்.

ஆயினும் குறிக்கோளினால் இச்சான்றோர்கள் ஒன்றுபட்டவர்களே. எம் வாழ்க்கைக்கு ஓர் இலட்சியமும் அதனைப் பெறுதற்குரிய நெறியில் நிலைத்து (ஊன்றி) நிற்றலும் வேண்டப்பெறும். இதை அப்பரடிகள் "குறிக்கோள்ளிலாது கெட்டேன்" என்று பிறர் நிலையில் வைத்துப் பாடியிருப்பினும் உயரிய குறிக்கோளுடன் வாழ்ந்தவர் என்பதில் ஐயமில்லை. உலகம், உயிர் அனைத்திற்கும் பரம்பொருளாக விளங்கும் முழுமுதற்கடவுள் சிவபெருமானே என்ற கொள்கை திருமுறைகளின் சாரம் ஆகும். எவ்விடத்தும் எக்காலத்தும் நீக்கமற நிற்கும் உண்மை அறிவு.

இறைவர் அவரது இன்ப மயமான இருப்புநிலையில் (Static Aspect) சிவம் என்றும் உயிர்கள் பொருட்டுப் பஞ்சகிருத்தியங்களைச் (படைத்தல், காத்தல், மறைத்தல், அருளல், அழித்தல் என்ற ஐவகைத் தொழில்களைச்) சங்கற்ப மாத்திரையாற் புரியும் இயக்கநிலையில் சக்தி என்றும் போற்றப்பெறுதலின் பரம்பொருளையே சக்தியும் சிவமுமாக (அம்மையப்பராக) திருமுறை ஆசிரியர்கள் பரவிப் பணிந்தனர். சக்தி - Dynamic Aspect.

## தீய சக்திகள்

தீய சக்திகளினின்று உயிர்களைக் காத்தற்பொருட்டு தம் ஆற்றலின் வடிவமாக வெளிப்பட்ட விநாயகர் (வாரணமூர்த்தி), முருகன் (சத்துரு

சங்காரவேல்) ஆகிய மூர்த்தங்களையும் வைப்புத் தலங்களைப் பாடுதல்போல் திருப்பதிகங்களிற் போற்றியுள்ளனர்.

## ஒன்பதாம் திருமுறையில் திருவிடைக்கழி முருகனைப் போற்றும் சேந்தனார்

திருவிடைக்கழி ஒன்பதாம் திருமுறையில் முருகனைப் போற்றும் சேந்தனார், திருவிசைப்பாவும் பதினொராம் திருமுறையில் கபிலதேவர் அருளிய மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலையும், அதிராவடிகள் பாடிய மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவையும் நம்பியாண்டார் நம்பி அருளிய திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலையும் நோக்கத்தக்கவை. சங்க இலக்கியங்களில் ஒன்றாகிய திருமுருகாற்றுப்படையும் பதினோராம் திருமுறையில் தொகுக்கப் பெற்றுள்ளது. எனவே அம்பிகை, விநாயகர், முருகன் ஆகிய அருள்வடிவங்கள் யாவும் பரம்பொருளின் வடிவமே என்பது எம் திருமுறையாசிரியர்களின் திருவுள்ளம்.

திருஞானசம்பந்தர்: "தனதடிவழிபடும் அவரிடர் கடிகணபதிவர அருளினன்" என்றும் திருநாவுக்கரசர் "நஞ்செந்தில் மேய வள்ளி மணாளற்குத் தாதைகண்டாய்", "நங்கடம்பனைப் பெற்றவன் பங்கினன்" என்றும் முறையே விநாயகரையும் முருகவேளையும் பரவுதல் நோக்கத்தக்கது. இவர்கள் பரம்பொருளாகிய ஈசனின் அருள்வடிவங்களே, எனவே அவரில் வேறல்லர் என்று சைவநன்மக்கள் போற்றுவர். அதனால் திருமுறை யாசிரியர்கள், "சங்கரன்தான் மறவாமையே பொருள்" எனக் கொண்டவர்கள் என்பது முடிந்த கொள்கையாகும்.

சிறு தேவதைகளை வணங்குவதும் திருமுறை ஆசிரியர்கட்கு உடன்பாடல்ல. அப்பர் "சென்று சென்று சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம், சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்" என்றும் மாணிக்கவாசகர் "எச்சத்தார் சிறுதெய்வம் ஏத்தாதே" .... என்றும் போற்றியுள்ளனர்.

"...சிறுதெய்வம் ஏத்தாதே, அத்தேவர் அவர் தேவர் என்றிங்ஙன் பொய்த்தேவுப் பேசிப் புலம்புகின்ற பூதலத்தே..... சென்றூதாய் கோத்தும்பீ" என்று பல்லாண்டுச் சேந்தனாரும் சிறுதெய்வ வழிபாட்டினைப் புறக்கணித்தல் காணலாம்.

இறைவனுக்கு ஆற்றும் பணியினும் அடியவர்க்குப் புரியும்

தொண்டே சமய வாழ்க்கையின் முதன்மைக் கடப்பாடாகக் கொள்ளப்பெற்றது. திருமுறைப் பாடல்களில் அடியார்களையும் பரவும் பாடல்கள் விரவி வருதல் காணத்தக்கது.

**பேரின்பப்பேறு கிடைக்கும் என்று கூறும் அப்பர் பெருமான்**

'மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தைவித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும்.....நிற்பராகில் சிவகதி வளையுமன்றே.'

இங்ஙனம் சீரிய செவ்விய ஒழுக்கம் மேற்கொள்ளின் மனிதவயலில் பேரின்பமாகிய சிவகதி என்னும் விளைச்சலை ஒருவன் அடைய முடியும். இஃது திருநாவுக்கரசு நாயனார் வேளாண்மைக் குடியில் தோன்றியபடியால் அவர் குடிப்பெருமை அனுபவப் பாடல். உழுதல், பண்படுத்தி விதைத்துப் பயிர்வளர்த்தல், பின் வளரும் பொழுது உடன்வளரும் களைகளைத் தெரிந்து களைந்து, உரிய காலத்தில் தவறாது நீரிட்டுப் பாய்ச்சி, வேலிகோலிக் காத்து நல்லநெல்மணி விளைவு பெறுவான்.

வாகீசர் பொறி, புலன்கள், அந்தக்கரணங்கள் ஆகிய கருவிகளின் நின்றும் ஆன்மா வேறு என்றும் காட்சியை தரிசித்தல், கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, இரக்கம், அறிவு, மெய்மை, தவம், அன்பு என்னும் எட்டு மலர்களினால் மனதில் 'ஈசனை' சரியை வழி நெறிஞானம்பெருக்கி சிவகதி பெறலாம் என்பர்.

சிவகதி பெறச் சமயகுரவர்கள் அனைவரும் இறைவனைப் பரவிப் பாடியிருப்பினும் அவருள் சுந்தரர் தனித்து விளங்குகின்றார். இவர் அருளிச் செய்துள்ள 'திருத்தொண்டர் தொகை' அடியார் சிறப்புக்கு மூலநூலாகப் போற்றப்பெறுவது. நம்பியாண்டார் நம்பி அருளிச்செய்த திருத்தொண்டர் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் பெயரிற் பாடிய திருவந்தாதி, திருச்சபை விருத்தம், திருமும்மணிக்கோவை, திருவுலாமாலை, திருக்கலம்பகம், திருத்தொகை என்ற பிரபந்தங்களும், திருவேகாதசமாலையும் சுந்தரர் வழிநின்று அடியார் பெருமையினை மேலும் விரிப்பனவும் தொண்டர்களின் சிறப்போடு பரம்பொருளின் அருட்செயலையும் போற்றிப்பரவும். திருத்தொண்டர் சிறப்பை சேக்கிழார் "அளவிலாத பெருமையராகி, அளவிலாஅடி யார்புகழ்கூறுகேன்.... பெருமையால் தம்மை ஒப்பார்பேணலால் எம்மைப்பெற்றார்" என்று புகழ்ந்து பாடுதல் நோக்கத்தக்கது.

திருஞானசம்பந்தர் உள்ளிட்ட அருளாளர் பலரின் கொள்கையினையே சேக்கிழார் விரித்துப் பாடியுள்ளார். இதை (திருமுறையை) முழுமையாய் பயில்வார்க்குத் எளிதிற் புலனாகும்.

"செம்மலர் நோன்தாள் சேரலொட்டா..... மாலற நேயம் மலிந்தவர் வேடமும், ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே" (மெ.சாத்திரம்)

பிறவியை நொந்து பேசும் பல சமயங்களுள. எனினும் எடுத்த இப்பிறவியை மதித்து வாழ்வாங்கு வாழ்ந்து பயன்பெறும் குறிக்கோள் வாழ்வினைத் திருமுறைகள் சிறப்பாக வலியுறுத்துதல் சுட்டுதற்குரியது.

அப்பர் பெருமான் "வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்" என்றும் "மனிதப்பிறவி வேண்டுவதே இந்த மாநிலத்தே" எனறும் அறிவுறுத்தினார்.

(வளரும்)



திருமுறை முற்றோதல் நிறைவு விழா: முருகன் புத்தகசாலை அதிபர் திரு. க. மகேசன் அவர்களுடன் இந்து சமயப் பேரவை நிர்வாகிகள். (விபரம் பக். 46ல்)

# குழைந்தேன் வாசகத்தில்

இளம்பிறையாளன்

குருநாதன் சந்நிதியில்
குவிகின்ற வாசகத்தேன்
அருமையிலும் அருமையன்றோ
ஆருயிரின் திறமையன்றோ

தண்ணார் தமிழளித்த
தண்பாண்டி நாட்டானின்
தண்டமிழைத் தாலமதில்
தாரகமாய்க் கொண்டவனாம்

திருவாசக சாமியென்றே
திக்கெல்லாம் புகழ்மணக்கும்
திருவான சபாரத்தினம்
தித்திக்கும் வாசகத்தில்

திறமான புலமையுள்ள
தீனபந்து அவனன்றோ
மறவாத மனமுடையோன்
மாண்பான குணமுடையோன்

வாய்திறந்தாற் கமகமக்கும்
வண்டமிழாம் தேன்மாரி
ஓய்வின்றி உரைத்திடுவான்
ஓங்காரத்து உட்பொருளை

காவியொடு காய்தாங்கி
கருணையொடு தாய் ஆகி
தேவியுடை சந்நிதியின்
தெற்காக இருந்தவனாம்

கேதீச்சரம் தனையண்மிக்
கேடிலாத பணிபுரிந்தோன்
வேதியனின் பதம் பணிவோன்
வேண்டுமட்டும் தமிழ்படித்தான்

படிப்பதென்றால் வாசகந்தான்
பார்ப்பதுவும் வாசகமாய்ப்
பார்த்திடுவான் அடியேற்கும்
பண்ணிவிட்ட அருளாலே

பாவியேனும் பண்புடனே
பாவியத்தைப் படித்திடுவேன்
காவியத்தைக் கருத்தழிந்தே
கண்ணீரும் வடிந்தோடும்

படித்தேன் வாசத்தைப்
பார்த்தேன் பரம்பொருளை
குடித்தேன் தேனாற்றைக்
குழைந்தேன் அப்பாட்டில்

குழைந்து குழைந்தேநான்
குமைந்தேன் வாசகத்தில்
அழைந்து அழைந்துநல்ல
ஆளானேன் அவனியிலே

வெற்றிலையைப் போட்டவுடன்
வெறும்பிள்வை வாயிலிட்டுக்
கற் போரின் மனமுருகக்
கற்பிப்பான் வாசகத்தை

வாசகத்தில் அவன்ஆழ்ந்து
வாழுகின்ற பருவத்தில்
யாசகத்தால் யான்சென்றேன்
யாரறிவார் என்குருவை

ஒருநாளென் வீடுவந்து
திருவாசகம் எடுஎன்றான்
தருவான் செவிக்குணவு
தரளமாய் அவன் சொரிவான்

என்றெண்ணி வாசகநூல்
எடுத்தவன்கை கொடுத்திடவும்
மன்றலைவன் தான்விரிக்க
வந்த தந்தப் பொற்சுண்ணம்

திகைத்தேன் - இது என்ன
செத்தவீட்டுப் பாட்டென்றோ
பயந்தாய் - பண்ணேடு
பாடுகநீ எனப் பணித்தான்

என்ன அதிசயம் எம்பெருமான்
சொன்னதிருவாசக மென்று
சொன்னானென் குருநாதன்
ஒலிக்கிறதே சொல் தொடர்ந்து

என்னதான் படித்தாலும்
இதற்கொப்பா எதையுமேநான்
காணவில்லை இன்னும் நான்
இறைவாநீ ஊட்டிவிட்டாய்

ஊட்டிவிட்ட தேனருந்தி
ஊறியதில் நான் திளைக்கக்
காட்டிவிட்டாய் நற்கதியை
கடையேனும் ஆட்பட்டேன்

காட்டிவிட்ட பாதையிது
காலமெல்லாம் என்னையே
கசக்கிப் பிழிகிறதே

நன்றியப்பா நாயேனின்
நலிவனைத்தும் போக்குகின்ற
பொன்போன்ற வாசகத்தை
போற்றிடுவோம் நாமென்றும்.

## மீண்டும் ‘ஆத்மஜோதி’

‘ஆத்மஜோதி’ மீண்டும் கனடாவில் வெளிவருவதை வரவேற்றும் பாராட்டியும்

இ. க. கந்தசாமி
கொழும்பு - 6

தமிழ் மணி க. ஜீவமோகன்
தலைவர், தமிழ் மாமன்றம்
கொழும்பு - 11

திருவாசகமணி
கலாநிதி நா. சண்முகம்
பொதுச்செயலாளர்,
தமிழ் மாமன்றம்
கொழும்பு - 11

ஆகிய பெருமக்கள் கடிதங்கள் எழுதியுள்ளனர்.

அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- ஆசிரியர் குழு

# திருமுறைக் கதைகள்

## ஆத்மஜோதி நா. முத்தையா

## 2. நரிக் கதை

ஒரு காட்டில் ஒரு வேடன். அவன் பெயர் வனசரன் என்பது. வேட்டை ஆடி அதில் கிடைத்ததை உண்பதுதான் அவனது வாழ்வு. ஒரு முறை மூன்று நாளாக ஒரே பட்டினி. காய்கனி கிழங்குதானும் அகப்படவில்லை. அவரவர் செய்த வினையின் பிரகாரம்தான் அவரவருக்கு உணவு கிடைக்கும். "தவத்தளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்" என்பது ஔவையின் வாக்கு.

'இலர் பலராகிய காரணம் நோற்பார் சிலர்
பலர் நோலாதவர்'

என்பது வள்ளுவர் வாக்கு. உலகத்திலே வறியவர் அதிகமாயிருத்தலுக்கும் செல்வர் மிகக் குறைவுடையவராயிருத்தலுக்கும் காரணம் தவம். தவம் செய்தவர்கள் சிறுதொகையினர். தவம் செய்யாதவர்கள் அனேகர் என்பது பொருள். சிவபெருமானைப் போற்றாதவருக்கு இவ்வுலகில் ஒரு அடையாளம் உண்டாம். அதாவது உடுக்கத் துணியும் அற்று ஒரு சோற்றுப் பருக்கை தானும் கிடையாது அலைவார்களாம். இரந்தாலும் ஒரு சோற்றுப் பருக்கைதானும் கிடையாதாம். பிச்சையிலே கிடைப்பதற்கும் முற்பிறப்பில் கொடுத்து வைத்திருக்க வேண்டுமாம்.

வனசரனுக்கு நாலாவது நாள் ஒரு அதிர்ஷ்டம் காத்திருந்தது. ஒரு கண் குருடான யானை தண்ணீர் குடித்துக் கொண்டிருப்பதைக் கண்டான். நாணைக் காதளவுக்கும் இழுத்து அம்பைக் குறி வைத்தான். பார்வையுள்ள கண்ணை அந்த அம்பு குருடாக்கியது. யானை உரத்த சத்தமிட்டு நிலத்திலே விழுந்து இறந்தது.

வேடனுடைய வில்லிலிருந்து அம்பு புறப்படும்போது வேடனுடைய காலில் ஏதோ சுரீர் என்றது. வேடன் காலை உதறினான். படம் எடுத்த நாகம் ஒன்று பக்கத்தே சென்று விழுந்தது. வேடன் வில்லால் நாகத்தின் தலையில் ஓரடி ஓங்கி அடித்தான். பாம்பும் அக்கணமே இறந்தது. வேடனும் விடம் தலைக்கேறி இறந்தான். வேடனின் அம்படிபட்டு யானையும் இறந்தது.

மூன்று உயிர்கள் ஒரே நேரத்தில் இறந்ததை பற்றை மறைவில் பதுங்கி இருந்த நரி ஒன்று கண்டது. சந்தோஷத்தால் துள்ளிக் குதித்தது.

நரி ஒரு கணக்குப் போட்டது. யானை ஆறுமாதத்திற்குப் போதியது. வேடன் மூன்று நாளைக்கு உணவாவான். பாம்பு இன்றைய உணவுக்குப் போதியது. நரியனார் வாலைக் குழைத்துக் குழைத்து பலமுறை மூன்றையும் சுற்றிச் சுற்றி வந்தார். எதை முதலில் சாப்பிடுவது என்பது தான் நரியின் இப்போதைய பிரச்சினை.

நரி அவசரப்பட்டு உண்ணவும் இல்லை. ஊளையிட்டு மற்றைய நரிகளை அழைக்கவும் விரும்பவில்லை. அவ்வளவையும் தானே முழுதாகத் தின்று தீர்க்க வேண்டும் என்பதுதான் நரியின் பேராசை. ஒரு துண்டு இறைச்சிதானும் வேறு எவரும் சாப்பிடக் கூடாது என்ற லோபத்தன்மை நரிக்கு. மனிதனும் இந்த நரியைப் போலப் பேராசை உள்ளவன்தான். இதனால்தான் 'எச்சில் கையால் காகம் துரத்தாதவன்' என்ற பெயரும் மனிதனுக்கு உண்டு.

நரியனார் கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தார். வில்லில் பூட்டியிருந்த நாண் நரியனாரின் பார்வையில் விழுந்தது. இந்த வாரைக் கடித்துப் பல்லைத் தீட்டிக் கொண்டால் மற்றைய இறைச்சிகளைச் சாப்பிடுவதற்கு இதமாக இருக்கும் என்று நரி நினைத்தது. வாரை நறுக்கென்று கடித்தது. வில்லு நிமிர்ந்து நரியின் தலையில் அடித்தது. நரி தலை கிறுகிறுத்து அந்த இடத்திலேயே இறந்தது.

இரைதேடப் போயிருந்த இந்த நரியின் சோடி நரி தற்செயலாக அவ்விடம் வந்தது. நால்வரையுங் கண்டு கவலை கொண்டது. கவலை எவ்வளவு நேரத்திற்கு? பிறந்தோர் இறப்பது உலக நியதி என்று மனதைத் தேற்றிக் கொண்டது.

மனித இறைச்சியைச் சுவை பார்த்து எத்தனை நாளாகிவிட்டது என்று பேராவலோடு வேடனைக் கடித்து உண்ணத் தொடங்கியது. பாம்பின் விடம் ஏறிய வேடனின் உடம்பு பெண் நரிக்கும் எமனாகியது. ஒரே நேரத்தில் ஐந்து உயிர்கள் உயிர் பிரிந்தமை பெரிய நூதனமல்ல. எங்கள் நாட்டிலே பொம்பர் ஒரு குண்டு போட்டு ஐந்து குடும்பங்களையே நாசமாக்கிவிட்டது. இக்கதையைப் புலவர் ஒருவர் பின்வரும் பாடலில் குறிப்பிடுகின்றார்.

**கரியயொரு திங்க ளாறும் கானவன் மூன்று நாளும்**
**இரிதலைப் புற்றி னாகம் இன்றுணும் இரையா மென்று**
**விரிதலை வேடன் பக்க விற்குதை நரம்பைக் கவ்வி**
**நரியனார் பட்ட பாடு நாளைநாம் படுவோ மன்றே.**

மனிதனும் இந்த நரியைப் போல் பேராசைக்காளாகி அதனாலேயே

தினமும் இறந்து கொண்டிருக்கிறான். பேராசை பெருந் தரித்திரம் என்று சொல்வார்கள். இங்கே பேராசை பெருமரணத்தையல்லவா விளைவித்துவிட்டது.

நாவுக்கரசரும் இக்கதையைக் கேள்விப்பட்டிருக்கிறார். தான் பாடிய ஆதிபுராதனக் குறுந் தொகையில் "நரிவிருத்த மதாகுவர் நாடரே" என்றொரு வரி குறிப்பிடுகின்றார். அக்கினி வளர்த்துப் பெருந்தொகைப் பணம் செலவு செய்து யாகங்கள் செய்வர். ஆனால் இறைவன் அந்த அக்கினியின் உருவினன் என்பதை உணர்ந்தாரில்லை. பிரம விஷ்ணுக்கள் இருவரும் பிரம்மமாய் நின்ற சோதியைத் தேடித்தேடி அலுத்து முடிவில் உண்மையைத் தெளிந்தனர். நரிக்கு இறுதியைக் கொண்டு வந்தது அதன் பேராசை. பிரம விட்டுணுக்களுக்கு அறியாமையால் இறைவனை அறிய முடியவில்லை. நரிக்கும் பேராசையினால் அறியாமை வந்தது. இதனை அப்பர்


எரிபெருக்கு வரவ்வெரி யீசன்
உருவருக்க மதாவது ணர்கிலார்
அரியயற் கரியானை யயர்த்துப் பொய்
நரிவிருத்த மதாகுவர் நாடரே

என்று அருளியுள்ளார்.


APPLEMORE
AUTOMOTIVE INC.
வாகனப்புகை வெளியேற்றப் பரிசோதனை

ONTARIO'S DRIVE CLEAN
For the air we breathe

Ontario Emission Inspection



ஒன்ராறியோ அரசாங்கத்தினால்
அங்கீகரிக்கப்பட்ட வாகனப்பரிசோதனை நிலையம்
குறைந்த விலையில், குறைந்த காலத்தில்
குறையில்லாது உங்கள் வாகனத் திருத்த
வேலைகளை செய்து கொள்ள வாருங்கள்
TEL: (416) 285-4998
2500 LAWRENCE AVE. EAST, UNIT #11
SCARBOROUGH, ONT.

## இலக்கண வித்தகர், பண்டிதர்
# இ. நமசிவாயம்

தமிழீழத்துப் பேரறிஞர் பண்டிதர் இ. நமசிவாயம் அவர்கள் தமிழ் நாட்டில் கடந்த 10-09-2000 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்கள்.

பண்டிதர் அவர்கள் யாழ்ப்பாணத்துக் கட்டுவன் பதியில் சைவமடம் என்னும் இடத்தில் 12-11-1916ல் பிறந்தவர். இவரது பெற்றோர் திரு. இராமசாமி - திருமதி பருவதம்மா இராமசாமி தம்பதிகள். முத்தம்மா (திருமதி முத்தம்மா ஏரம்ப ஐயர்), தாமோதரம்பிள்ளை, செல்லம்மா (திருமதி செல்லம்மா சின்னத்துரை) ஆகியோர் இவரது உடன்பிறப்புக்கள்.

நமசிவாயம் அவர்கள் புன்னாலைக்கட்டுவன் கணேசையர் அவர்களிடம் தமிழ் இலக்கணத்தையும் இலக்கியங்களையும் முறையாகக் கற்று மதுரைத் தமிழ்ப் பண்டிதர் பரீட்சையில் சிறப்புறச் சித்தியடைந்தார்.

சங்கானை அப்புத்துரை ஐயரின் மகள் கமலாம்பிகைக்கும் நமசிவாயம் அவர்களுக்கும் திருமணம் நடந்தது. அதன் பயனாக பாலச்சந்திரன், கிருபாகரன், இராமச்சந்திரன், ஞானகரன், ஸ்ரீகாந்தன், உமாகாந்தன் ஆகிய மைந்தர்களையும் தர்மாம்பிகை, ஞானாம்பிகை, தவமணிதேவி, புனிதவதி, கௌரிதேவி ஆகிய புதல்விகளையும் பெற்று வளர்த்தார்.

பாலச்சந்திரன் வசந்தகுமாரியையும் கிருபாகரன் சந்திரவதனியையும் இராமச்சந்திரன் லலிதாவையும் ஸ்ரீகாந்தன் காந்திமதியையும் திருமணஞ் செய்துள்ளனர். புதல்விகள் தர்மாம்பிகைக்கு திரு. லிங்கோற்பநாதரையும் ஞானாம்பிகைக்கு திரு. சாமி அப்பாத்துரையையும் தவமணிதேவிக்கு திரு சிதம்பரநாதனையும், புனிதவதிக்கு திரு சிவகடாட்சத்தையும் கௌரிதேவிக்கு திரு. யோகேஸ்வரனையும் திருமணம் செய்வித்து மகிழ்ந்தார்.

பண்டிதர் நமசிவாயம் அவர்கள் நெடுங்காலமாகத் தெல்லிப்பழை வீமன்காமம் பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். இப்பாடசாலை கலாநிதி வித்தியானந்தன் அவர்களின் தந்தையார் சுப்பிரமணியம் அவர்களால் நிறுவப்பட்டு அவரது நிர்வாகத்தில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இப்பொழுது இது மகாவித்தியாலயமாகியுள்ளது. பண்டிதர் அவர்கள் பிற்காலத்தில் இப்பாடசாலைக்கு அதிபராகி அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்தார்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், வெண்காயச் சங்கம் போன்றவற்றிலும் பிற தெல்லிப்பழை, கட்டுவன், வீமன்காமம் போன்ற பகுதிகளின் சமூக அமைப்புகளிலும் ஆர்வங்காட்டி அவற்றின் பணிகளுக்கு உதவிப் பயன்களை மக்களுக்கு வழங்கியுள்ளார். சங்கம் சபைகளில் பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பு. அவற்றைச் சுமுகமாகத் தீர்த்துவைப்பதிற் சிறந்தவர் பண்டிதர் அவர்கள். அவரது வாக்குவன்மையை, வாய்மையை மக்கள் பெரிதும் மதித்தனர். அதற்கு அவரது அறிவு மட்டுமல்லாது உயர்ந்த ஒழுக்கமும் காரணமாக இருந்தது.

பண்டிதர் அவர்கள் எம் மத்தியில் 'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்' ஆக வாழ்ந்தவர். கவிதை புனைவதில் வல்லவர். இவரது கவிபாடுந் திறனையும் கற்பனை வளத்தையும் 'சந்நிதிக் கந்தன் சதகம்' என்னும் நூலிற் காணலாம். இவரால் அவ்வப்போது எழுதப் பெற்ற சமய, இலக்கிய, இலக்கணம் சார்ந்த கட்டுரைகள் ஏராளம். இவரது பேச்சுக்களைக் கேட்பதற்கு அறிஞர்களே அதிகம் கூடுவர். எந்தப் பொருளை எடுத்துக் கொண்டாலும் ஏதாவது ஒரு புதிய கருத்தாற் புலவரைக் கவரும் அபூர்வ சிந்தனைத் திறன் படைத்தவர்.

இலங்கை அரசு 'சமாதான நீதவான்' பட்டத்தை வழங்கி இவரைக் கௌரவித்தது. இதனைக் கொண்டாடுமுகமாக கட்டுவன் பகுதி மக்களும் இவரது மாணவர்களும் சேர்ந்து எடுத்த பெருவிழா கட்டுவனில் கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகமும் 'இலக்கண வித்தகர்' என்னும் பட்டத்தை அளித்துக் கௌரவித்தது.

இப்பேரறிஞர் பிற்காலத்தில் புற்றுநோயால் வருந்திக் கொழும்பிற் சிகிச்சை பெற்றுவந்தார். பின்னர் சிகிச்சைக்காக அவர் தமிழ் நாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அப்பலோ மருத்துவ மனையில் 10-09-2000 ஞாயிற்றுக்கிழமை தமது 84வது வயதில் இறைவனடி எய்தினார்.

அவரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவபுரத்தரசைப் பிரார்த்திப்போமாக!

- வி. கந்தவனம்

# இந்து சமயப் பேரவைச் செய்திகள்

## கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டிக்குப் பவள விழா

துர்க்காதுரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பவள விழாவை இந்துசமயப் பேரவை கடந்த மே மாதம் கொண்டாடியது. விழா ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் 21.05.2000 ஞாயிற்றுக்கிழமை பேரவைத் தலைவர் திரு. சாமி அப்பாத்துரையின் தலைமையில் நடைபெற்றது.

ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தின் பிரதமகுரு சிவத்திரு பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் ஆசியுரையை அடுத்து இராமநாதன் மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

கனடா சைவசித்தாந்த மன்றத் தலைவர் திரு. தி. விசுவலிங்கம் அவர்கள் தாயகத்தில் வெளியிடப்பெற்ற துர்க்காதுரந்தரியின் பவளவிழா மலரையும் கனடாவில் சைவசித்தாந்த மன்றம் செல்வி அவர்களின் 75ஆவது பிறந்ததின விழாவைக் கடந்த தை மாதம் கொண்டாடி வெளியிட்ட 'அன்புநெறி' சஞ்சிகையின் விசேட பவளவிழா இதழையும் அறிமுகஞ் செய்து உரை நிகழ்த்தினார்.

அடுத்துச் சட்டத்தரணி திரு. சிவ சிறீதரன் அவர்கள் தாயகத்தில் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள் எழுதிய 'தங்கத் தலைவி' என்னும் நூலுக்கு அறிமுகவுரை நிகழ்த்தினார். நூலின் சிறப்புப் பிரதிகளைக் கவிஞர் வி. கந்தவனம் திரு. தி. விசுவலிங்கம் அவர்களுக்கும் திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தம் அவர்களுக்கும் வழங்கினார்.

'தமிழர் தகவல்' பிரதம ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம் அவர்கள் பிரதம விருந்தினர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்களை அறிமுகஞ் செய்தார். செஞ்சொற் செல்வர் துர்க்காதுரந்தரி அவர்களின் பணிகளையும் பெருமையையும் பற்றிக் கூறிப் பின்னர் 'சுமங்கலி பூசை' என்னும் பொருளில் சொற்பெருக்காற்றினார்.

நிறைவாக, செஞ்சொற் செல்வரை இந்து சமயப் பேரவையின் காப்பாளர் கவிஞர் வி. கந்தவனம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததைத் தொடர்ந்து இந்துசமயப் பேரவைத் தொண்டரும் ஆதரவாளர்களும் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பலவகைப் பணிகளுக்கும் உதவும்வகையில் நன்கொடைகள் வழங்கினர்.

## கனடாவில் 'ஆத்மஜோதி' வெளியீடு

ஒன்ராறியோவில் இந்துசமயப் பேரவையை ஆரம்பித்துவைத்த சைவப்பெரியார் அமரர் நா. முத்தையா அவர்களின் 'ஆத்மஜோதி'ப் பத்திரிகையை இந்து சமயப் பேரவை வெளியிடத் தொடங்கியுள்ளது. இதன் முதலாவது இதழ் வெளியீட்டு விழா 11.06.2000 ஞாயிற்றுக்கிழமை கனடா கந்தசுவாமி கோயிலில் திரு. சாமி அப்பாத்துரையின் தலைமையில் நடைபெற்றது.

விநாயகப் பெருமான், திருமுருகன் பூசைகளைத் தொடர்ந்து சிவத்திரு இரங்கநாதக் குருக்கள் ஆசியுரை வழங்கினார். வித்துவான் கு.வி. மகாலிங்கம் அவர்கள் தமது சிறப்புரையில் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் பணிகளை எடுத்து விளக்கினார். ஆழ்கடலான் திரு. முருகவே பரமநாதன் 'ஆத்மஜோதி'யை வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்தினார்.

'ஆத்மஜோதி' சிறப்புப் பிரதிகளை ஞானசுரபி முத்தையா அவர்களை நன்கு அறிந்தவரும் ஓய்வுபெற்ற எழுதுவினைஞருமாகிய திரு. பாலசிங்கம் அவர்களும் யாழ்நகர் வர்த்தகத்தைச் சேர்ந்த திரு. கந்தசாமி அவர்களும் மெகா கொண்டாட்ட மண்டப முகாமையாளர் திரு. ஜெகநாதன் அவர்களும் பெற்றுக்கொண்டனர்.

பத்திரிகை ஆசிரியர் கவிஞர் வி. கந்தவனம் அனைவருக்கும் நன்றிகூறி, இந்து சமயப் பேரவையின் நூல்வெளியீட்டு முயற்சிகளுக்கு ஆதரவு தந்துவரும் விவேகா அச்சக அதிபர் திரு. ஸ்ரீதரன் செல்வநாயகம் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

நாம பசனைப் போட்டிகளிற் சிறப்பாகச் செய்தவர்களுக்குச் சான்றிதழ்களும் புத்தகப் பரிசில்களும் வழங்கப்பெற்றதுடன் விழா நிறைவுபெற்றது.

இதன் அறிமுகக் கூட்டம் ஒன்று 28-07-2000 வெள்ளிக்கிழமை மொன்றியலில் அருள்மிகு திருமுருகன் கோயிலிலும் கோயில் நிர்வாக சபை ஆதரவுடன் நடத்தப்பட்டது. ஆலயக் குருக்கள் சிஸ்ரீ வெங்கடேஸ்வர சர்மா, திரு. ப. சுப்பிரமணியம், திரு. கந்தையா தெய்வேந்திரம், திரு M. உமாபதி, திரு. சிவ முத்துலிங்கம், கவிஞர் வி. கந்தவனம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

## கனடாவிற் சைவ சமயம்

கவிஞர் வி. கந்தவனம் அவர்களால் எழுதப்பெற்ற 'கனடாவிற் சைவசமயம்' என்னும் நூலை இந்து சமயப் பேரவை வெளியிட்டுள்ளது. இதன் வெளியீட்டு விழா 01-10-2000 ஞாயிற்றுக்கிழமை ரொறன்ரோ ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் திரு. சாமி அப்பாத்துரை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. திரு. நா. சிவலிங்கம் அவர்களும் ஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்களும் பேரறிஞர் முருகவே பரமநாதன் அவர்களும் ஆசியுரைகள் வழங்கினர். திரு. தி. விசுவலிங்கம் அவர்கள் நூலை வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்தினார். கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள் ஆய்வுரை செய்தார். ஆலயக் குருக்கள் சிவஸ்ரீ குறிப்புரை வழங்கினர். நூலாசிரியரின் நன்றியுரையுடன் விழா நிறைவுற்றது.

இந்நூலின் அறிமுக விழா ஒன்று மிசிசாகா ஸ்ரீ ஜெயதுர்க்கர் ஆலயத்தில் 06-10-2000 வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது.

## பாராட்டு விழா

இந்து சமயப்பேரவைத் தலைவர் திரு. சாமி அப்பாத்துரை அவர்கள் ஒன்ராறியோ கல்வி அமைச்சின் ஆசிரியர் சபை கவுன்சிலராக தெரிவு செய்யப்பட்டமையைப் பாராட்டி மேற்படி இந்து சமயப்பேரவை நிர்வாகிகளால் கனடா கந்தசாமி கோயில் மண்டபத்தில் 19-06-2000 திங்கட்கிழமை பாராட்டுக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. பேரவையின் உப தலைவர் திரு. கா. கனகரத்தினம் தலைமை தாங்கினார். பல சைவப் பெரியார்களின் பாராட்டுரைகளைத் தொடர்ந்து திரு. சாமி அப்பாத்துரை அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

---

## மிசிசாகா ஸ்ரீ ஜெயதுர்க்காவுக்கு நிரந்தர கோயில்

மிசிசாகா அருள்மிகு ஜெயதுர்க்கா தேவி கடந்த செப்டம்பர் 10ம் திகதி முதல் 1808 Drew Road (Dixie & Derry) முகவரியில் அமைக்கப் பெற்ற அழகிய ஆலயத்தில் எழுந்தருளியுள்ளார். பூர்வாங்கக் கிரியைகள் ஆவணி 24ம் நாள் (08-09-2000) ஆரம்பமாகி ஆவணி 26ம் நாள் (10-09-200) மகாகும்பாபிடேகம் நடைபெற்றது.

# ஆறுமுகநாவலர்
## அறிஞர்கள் புகழுரைகளுட் சில

ஆரூர னில்லைப் புகலியர்கோ னில்லை அப்பனில்லைச்
சீரூரு மாணிக்க வாசகன் இல்லைத் திசையளந்த
பேரூரும் ஆறுமுக நாவல னில்லைப் பின் இங்கியார்
நீரூரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கு நீர்மையரே.

- சிவசம்புப் புலவர்

The champion reformer of Hindus.

--Sir P. Ramanathan

ஈழமுதற் றென்னாடிருண் மூழ்கிப் போகாமல்
வாழவைத்த சைவமருந்தாய் நாவலனைக்
கூழலையா ரேங்கநின்பாற் கூட்டியவா றென்னேயோ
வாழமுந்நீர் நஞ்சுண்டு அழியாத விர்சிவமே.

-திருநெல்வேலி தண்டபாணி சுவாமிகள்

மன்னுபெருந் தமிழ்ப்பாட்டை யிலக்கணமு
மிலக்கியமு வரம்பு கண்டோன்
பன்னுசிவ புராணங்கள் பலதெரிந்தோன்
சிவாகமநூற் பரவை மூழ்கி
யுன்னுவநு பூதியெனும் விலைவரம்பி
லாமணிகை யுறக்கொண் டுள்ளா
னின்னுநய குணத்தினனாய்ச் சைவமெனும்
பயிர்வளர்க்கு மெழிலி போல்வான்.

- மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை

“வசன நடை கை வந்த வல்லாளன்.”

- பரிதிமாற் கலைஞர்
(வி.கோ. சூரியநாராயண சாஸ்திரிகள்)

# ஆசிரியர் முருகவே பரமநாதனுக்கு 'பேறிஞர்' பட்டம்

அஃகி அகன்ற அறிவுடைய சான்றோர் முருகவே பரமநாதன் அவர்களால் எழுதப் பெற்ற 'ஈழத்துச் சித்தர் குடைச் சுவாமிகள் என்னும் நூலின் வெயீடு 22-10-2000 ஞாயிற்றுக்கிழமை கனடா கந்தசுவாமி கோயிலில் திரு. சாமி அப்பாத்துரை தலைமையில் நடைபெற்றது.

ஆலய அர்ச்சகர் சிவஸ்ரீ ரெங்கநாதக் குருக்கள், வித்துவான் கு. வி. மகாலிங்கம், சட்டத்தரணி யசோ சின்னத்துரை, புலவர் ஈழத்துச் சிவானந்தன், திரு. சின்னையா சிவனேசன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

நூலாசிரியர் திரு. முருகவே பரமநாதன் அவர்களுக்கு இந்து சமயப் பேரவை சார்பில் 'பேறிஞர்' என்னும் பட்டத்தை காப்பாளர் வி. கந்தவனம் வழங்கிக் கௌரவித்தார். கௌரவ வாழ்த்துப்பாடலை மறு பக்கத்தில் காண்க.



இந்து சமயப் பேரவையின் காப்பாளர்
பேறிஞரைக் கௌரவித்தல்.

உ
சிவமயம்
கனடாக் கந்தசுவாமி ஆலயத்தில் 22.10.2000
ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற
**'ஈழத்துச் சித்தர் குடைச்சுவாமி'** என்னும் நூல்
வெளியீட்டு விழாவில்
நூலாசிரியர் **திரு. முருகவே பரமநாதன்**
அவர்களுக்கு
**'பேரறிஞர்'** என்னும் பட்டம் வழங்கிக்
கௌரவித்தபோது
பாடி வழங்கிய

## வாழ்த்துப் பா

முருகவே பரம நாத
முகில்மழை பொழியுங் காலை
பொருள்மறை ஆக மங்கள்
புராணங்கள் இதிகா சங்கள்
விரிவுறும் விளக்க மாகும்
மேலான செல்வந் தேங்கும்
பரவியே உருகித் தோய்வார்
பழவினை பாறு மாமே.

சொற்பொழி வன்றி வற்றா
ஊற்றெனத் தொடர்ந்து பாடும்
அற்புதக் கலையும் வல்லார்
ஆய்வுரை நடையும் வல்லார்
பற்பல நூல்கள் தந்தார்
பைந்தமிழ் செழிக்கச் செய்தார்
விற்பனப் பரம நாதர்
மேன்மைகள் கூறப் போமோ.

நிறைகுட மான நாதர்
நித்தமுந் திருமால் நெஞ்சில்
உறைவிட மான நாதர்
உயர்ந்தநல் லறிஞர்க் கெல்லாம்

**அறிஞராய் விளங்கும் நாதர்**
**அவர்க்குப் பேரறிஞர் பட்டம்**
முறையுடன் வழங்க ஆறு
முகனருள் செய்தான் வாழ்க!

மன்பதை துன்பம் நீங்கி
மகிழ்வொடு வாழ வேண்டும்
என்பதே குறிக்கோ ளாக
இணையிலா எழுத்தாற் பேச்சாற்
பண்புடன் சமயத் தொண்டு
பயனுற நாளுஞ் செய்யும்
அன்பருக் கன்பர் எங்கள்
ஆன்றபே ரறிஞர் வாழ்க!

அந்தமில் ஆற்றல் வாழ்க
அழகிய நெஞ்சம் வாழ்க
சுந்தரத் தொண்டு வாழ்க
தூயநல் லொழுக்கம் வாழ்க
செந்தமிழ் வாழ்க எங்கள்
சிறந்தபே ரறிஞர் வாழ்க
நந்தமி ழீழம் வாழ்க
நானிலம் வாழ்க வாழ்க!

— வி. கந்தவனம்
காப்பாளர்

இந்து சமயப் பேரவை
ஒன்ராறியோ

# திருமுறை முற்றோதல் நிறைவு விழா

இந்து சமயப் பேரவை இவ்வாண்டு ஏப்பிரல் 30ஆம் திகதி முதல் கனடா கந்தசுவாமி கோயிலில் ஞாயிறு தோறும் பன்னிரு திருமுறைகளை ஓதும் திருப்பணியை மேற்கொண்டு வந்தது. அதன் நிறைவு விழா நவம்பர் 5ம் திகதி கந்தசுவாமி கோயிலில் பேரவைத் தலைவர் திரு. சாமி அப்பாத்துரையின் தலைமையில் நடைபெற்றது.

முற்றோதலில் ஒழுங்காகப் பங்குபற்றிய அடியார்கள் கௌரவிக்கப்பெற்றதோடு பேரறிஞர் முருகவே பரமநாதன் அவர்களால் எழுதப் பெற்ற 'சைவத் திருமுறைகளின் விழுமியம்' என்னும் நூலும் வெளியிடப் பெற்றது. நூலின் சிறப்புகளைப் பற்றி திருமதி மீனா தவரட்ணம் உரை நிகழ்த்தினார். திருமுறைகளின் பெருமை பற்றிப் புலவர் ஈழத்துச் சிவானந்தன் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். முற்றோதலை முன்னின்று நடத்திய பேரவை உதவிச் செயலாளர் திரு. சிவ. முத்துலிங்கம் அவர்களும் பல வழிகளிலும் உதவியாக இருந்த கனடா கந்தசுவாமி கோயில் நிர்வாகிகளும் பாராட்டு வைபவத்திற்கு உதவிய முருகன் புத்தகசாலை அதிபர் திரு. க. மகேசன் அவர்களும் நன்றிக் குரியவர்கள்.



திருமுறை முற்றோதல் நிறைவு விழாவில் கௌரவம் பெற்ற அடியார்களும் இந்து சமயப் பேரவை நிர்வாகிகளும்.

# உலக வலம்

## கிறித்தவர்களானவர் மீண்டும் இந்துக்களாகின்றனர்

பாரதத்தில் கிறித்தவப் பிரசாரமும் இந்துக்களை மதமாற்றம் செய்யும் வேட்டையும் இன்றும் தீவிரமாக நடைபெற்று வருவது பலரும் அறிந்ததே. இது குறித்து இதுவரைகாலமும் பொறுத்துக்கொண்டிருந்த இந்து சமய பீடங்கள் பல இன்று விழித்துக் கொண்டன. மதமாற்றத்தை எதிர்த்து இவை தீவிர பிரசாரம் செய்வதோடு கிறித்தவர்களாக மாற்றப்பட்டவர்களை இந்து சமயத்துக்கு "மீள்மாற்றம்" செய்தும் வருகின்றன.

கடந்த ஆண்டு பீகார் மாநிலத்திலுள்ள சக்கரதார்ப்பூர் என்னும் நகரத்தில் 361 கிறித்தவர்கள் மீண்டும் இந்துசமயத்தைத் தழுவிக்கொண்டனர். ஒரிசா மாநிலத்தில் மனோகர்ப்பூர் என்னும் இடத்தில் கடந்த யூன் மாதம் 2ம் திகதி 70 கிறித்தவர்கள் இந்துக்களாக்கப்பட்டனர். இந்த மதமாற்றச் சடங்கு பூரி சங்கராச்சாரியார் சுவாமி நிஷலானந்த சரஸ்வதியின் தலைமையில் நடைபெற்றது.

"நாங்கள் ஆதிக் கிறித்தவர்களை மீள்மாற்றம் செய்யவில்லை. விருப்பத்துக்கு மாறாக வலிந்து கிறித்தவர்களாக்கப்பட்ட அப்பாவி இந்துக்ளையே மீள்மாற்றம் செய்துவருகின்றோம்" என்று மீள்மதமாற்றத்தைக் குறைகூறும் கிறித்தவ பீடங்களுக்கு சுவாமிகள் பதிலளித்துள்ளார். (மூலச்செய்தி: The Hindu, June 7, 2000)

## சென்னை அடையாறில் குடியேறியுள்ள அமெரிக்கச் சைவர்கள்

இருபத்தைந்து வருடங்களுக்கு முன் சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமியின் சொற்பொழிவுகளாற் சைவ சமயத்துக்கு மாறிய அமெரிக்கப் பெண் ஈசானியும் அவரது கணவர் துர்வாசரும் தமது பிள்ளைகளைச் சைவ முறைப்படி வளர்த்தற்பொருட்டுக் கடந்த ஆண்டு சென்னை அடையாறிற் குடிரேியுள்ளனர். இவர்களின் பெயர்கள் சத்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளாற் சூட்டப்பெற்றவை. அவற்றையே தமது பெயர்களாகப் பிறப்புச் சான்றிதழ்களில் மாற்றியுங் கொண்டனர். தமது பிள்ளைகளுக்கும் நிஷா, சித்தாரா, பிரியா என்று பெயர்கள் வைத்துள்ளனர்.

# ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

ஒருமுறை ரமணாச்சிரமத்தில் அடியார்கள் உணவருந்திக் கொண்டிருந்தபொழுது அடியார் ஒருவர் எறும்புகள் நாய்களுக்காகுதல் மிச்ச உணவு உதவுமே என்று கூறினார். ரமணபகவான் உடனே உமக்கு எறும்பு மீதும் நாய்மீதும் அன்பு உண்டா என்று கேட்டார். அவர் உடனே ஆம் என்றார். அப்படியானால் நாய்க்கும் எறும்பு புற்றுக்கும் உணவு வைத்த பின்பே நீர் சாப்பிட வேண்டும் என்று கூறினார். ரமண பகவான் உணவருந்தும்பொழுது இலையில் எந்தவித மிச்சமும் இல்லாமல் வழித்து துடைத்து சாப்பிடுவது வழக்கம்.

விளக்கில் இருக்கும் எண்ணெய் வற்றுகிறவரை தீபம் எரிகிறது. அதுபோலவே வினைகள் தீரும் வரை உலகில் மனிதவாழ்வு நிலைத்திருக்கின்றது.

சாதி சமய வித்தியாசம் பார்ப்போர் அருட்பெருஞ்சோதி ஆண்டவனைத் தரிசிக்க முடியாது.

அநேக மனிதர்கள் எதிலும் தோல்வி அடைவதேயில்லை. காரணம் அவர்கள் எதையும் செய்ய முயல்வதே இல்லை.

உலகில் மானிடர்களாகப் பிறந்த அனைவரும் திருவடி யாத்திரைக்காரர்கள். அதாவது தங்கள், தங்கள், கர்மவினைக்கேற்ப பலபிறவிகளை எடுத்து வாழ்ந்து இறுதியில் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவடியை அடைகின்றார்கள்.

தருமத்தின் படி நடப்பவனை தருமம் வழிநடத்திச் செல்லும்.

ஒவ்வொருவரும் தன் சொந்த முயற்சியினாலே மனிதநிலையில் இருந்து தெய்வநிலைக்கு உயர வேண்டும். தெய்வநிலைக்கு உயர வேண்டுமே ஒழிய மிருகநிலைக்கு தாழ்வுறக்கூடாது.

நாமஜெபமும் நாமசங்கீர்த்தனமுமே கலியுகத்தில் ஆன்ம ஈடேற்றத்திற்குக் கைகண்ட மருந்து.

மனிதர்கள் எப்படியும் வாழலாம் என்று வாழக்கூடாது. இப்படித்தான் வாழவேண்டும் என்று இலட்சிய வேட்கையுடன் வாழவேண்டும்.

தன்னலமற்ற சேவை செய்பவனுக்கு இறைவனின் கருணை எப்பொழுதும் உண்டு.

ஒவ்வொருவருக்கும் நாட்டுப்பற்றும் இனப்பற்றும் சமயநம்பிக்கையும் அவசியம் இருக்க வேண்டும்.

மறு சமயத்தவர்கள் வீடுவீடாகச் சென்று சமயத்தைப் பரப்புவதுபோல இந்து சமயத்தவர்களாகிய நாங்களும் வீடு வீடாகச் சென்று சமயத்தில் உள்ள நல்ல கருத்துக்களை மக்களுக்குப் போதிக்க வேண்டும்.

கூட்டுப் பிரார்த்தனையிலும் கூட்டு வழிபாட்டிலும் வீடுகளில் செய்யும் கூட்டு வழிபாடுகளிலுமே ஆன்மீக எழுச்சியின் உயிர்நாடி இருக்கின்றது.

உலகியல் வாழ்க்கையில் உழலும் மானிடர்கள், தங்கள் உலகியல் வாழ்க்கையை ஒரு கரத்திலும், ஆன்மீகத்தை ஒரு கரத்திலும் பிடித்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் உலகியல் வாழ்க்கையில் சறுக்கி விழும்பொழுது ஆன்மீகம் அவர்களுக்கு கைகொடுக்கும்.

நாம் உலகத்தில் வாழலாம். ஆனால் உலகத்தை நம்முள் வாழவிடக்கூடாது.

சுயநலம், பொறாமை போன்றவை சாமானிய மக்களுடன் மாத்திரம் நின்று விடவில்லை. பெரிய இடங்களுக்குள்ளும் புகுந்து விடுகின்றது என்பதை நினைக்கும்பொழுது அவற்றை எம்மால் சீரணிக்க முடியவில்லை.

மகான்களில் வாசத்தலத்தில் அருள்ஒளி எப்பொழுதும் வீசிக்கொண்டேயிருக்கும்.

பகவான் சத்திய சாயிபாபா எங்கும் நிறைந்தவர். எல்லாம் அறிந்தவர். அகண்டமானவர் அதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

முத்தி பெறுவதற்குக் குருவினுடைய ஆசிதான் வேண்டும் என்றால் குருவின் பெருமையை யாரால் தான் கூறமுடியும்.

ஏழைகளின் வாழ்வில் விளக்கேற்றுபவனுக்கு இறைவன் அவனுடைய வாழ்விற்கு விளக்கேற்றுவார்.

பேசுவதையெல்லாம் செயலில் காட்டும் செயல்வீரர்கள் மக்களின் உள்ளத்தில் இடம்பிடிப்பதோடு இறைவனின் உள்ளத்திலும் இடம்பிடித்துக் கொள்ளுவார்கள்.

தொகுத்து அளிப்பவர்: சிவ முத்துலிங்கம்

தற்போது எங்கும் கிடைக்கிறது புதிய
உறையில் புதுப்பொலிவுடன்

**RED RUBY**

**மிளகாய்த்தூள்**

**RED RUBY**

**RED RUBY இன்**

தயாரிப்புக்கள் என்றும்

- தரத்திலும்
- சுவையிலும்
- சுத்தத்திலும் சிறந்தவை

இல்லத் தலைவர்களின் நன்மதிப்பைப் பெற்ற
மொத்த விற்பனையாளர்

ஒருமுறை பாவித்து
உண்மை அறிந்திடுவீர்

**TEL: (416) 412-0626**
**(905) 946-9774**

**80 Nashdene Rd., Unit #56,**
**Scarborough. Ontario M1V 5E4**

# முருகன் புத்தகசாலை

## உங்களை வரவேற்கிறது



இலங்கை, இந்தியாவில் இருந்து
நேரடியாக புத்தகங்கள், பத்திரிகைகளை
இறக்குமதி செய்து விற்பனை
செய்கிறோம்.

**WESTERN UNION
MONEY TRANSFER**

**1241 A, ELLESMERE ROAD, SCARBOROUGH,
ONTARIO, CANADA M1P 2X8**

**TEL: (416) 285-9118**

தமிழர் மத்தியில் பலவர்ண அச்சு வேலைகளுக்கு
ஒரே ஒரு ஸ்தாபனம்

# விவேகா அச்சகம்

Wedding Cards, Cake Boxes, Memory Cards
பற்பல வடிவங்களில் பலவர்ண அச்சு வேலைகளுக்கும்
பரத நாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சி நிரல், Magazines, Flyers
மற்றும் சகலவிதமான வேலைகளை மிகக்குறைந்த
விலையில் அச்சுப் பதித்துக் கொள்ளவும்
திருமண அழைப்பிதழ்கள், பைகள், றிச்கேக் பெட்டிகள்
அனைத்தையும்அச்சமைத்துக் கொள்ள
எங்களை நாடுங்கள்

80 BARBADOS BLVD., UNITE 4, SCARBOROUGH, ON
(AT EGLINTON AVENUE BETWEEN MCCOWAN & BRIMLEY)

**Tel : (416) 410-6401, Fax : (416) 264 2715**